தென்றல்

ஆசிரியர்... கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, சித்திரை 19 (2-5-'59). சனிக்கிழமை | இதழ் 46

திராவிட அரசு!

★

கவிஞனே! பாடுக!
கூத்தனே! ஆடுக!
கலைஞனே! தீட்டுக!

உணர்ச்சி புடைத்தெழும் உங்கள் நரம்புகளுக்குப் புதிய வேலை கிடைத்துவிட்டது!

சிந்தை இனிக்கும் செந்தேன் செய்தி சென்னைத் தெருக்களை எல்லாம் தொட்டுவிட்டது.

காரிருளாம் காங்கிரஸ் கவிழ்ந்தது!
இளங்கதிராம் கழகத்தின்
பொன்னொளி எங்கும் மேவியது!
தீயோர் மாய்ந்தனர்!
தி. மு. க. எழுந்தது!
நச்சுப் படைகள் பாய்ந்தன.
நாச சக்திகள் தோள் தட்டின.
பண முதலைகள் சாடின.
பகைக்குலம் அனைத்தும் கூடின!
நகரம் அணைத்தது!
கழகம் வென்றது!
நகரத்தின் தலைமகனார்
நம் கழகத்தின் அரசு!

புதிய ஏட்டின் முதல்வர் ஆனார் எங்கள் அரசு!

தும்பைப்பூ வெள்ளாடை, தூய்மை, நிறை தொண்டு, துடிப்பாகச் செயலாற்றல் ஆகியவற்றின் மொத்த உருவம் தோழர் அரசு!

தொண்டர்க்குத் தொண்டர், தூயோர்க்குத் தோழர், தொல்லைகளின் பகைவர், எங்கள் அரசு!

கடல் சூழ்ந்த திராவிடத்தைக் கட்டியாண்ட அடல் மறவர் திருக்குலத்தின் பெயரோதும் அரசு! அவர் எங்கள் திராவிட அரசு!

காட்சிக்கெளியவர்' கழகத்துக்குரியவர், கடமையே நினைப்பவர். கண்ணியமே காப்பவர், கட்டுப்பாடே கொண்டவர், எங்கள் அரசு!

இனிமேல் அவர் மேயரென ஆளும் அரியணை பெற்ற அரசு!

தித்திக்கும் சேதி தந்தவனே!
முழக்கடா முரசை!
மீட்டடா யாழை!

வாக்களித்தோர்க்கு வழங்கடா நன்றியை! வழங்கடா வணக்கத்தை!

வணங்குகிறோம்;
சென்னை வாக்காளரை!
வாழ்த்துகிறோம் திராவிட அரசை!

☆

பரணி பாடும் பாண்டி

திமிரிடும் பரிகளும், பிளிறிடும் களிறுகளும் விரைகின்றன! ஆர்த்திடும் மறவரும், பகை சாய்த்திடும் படைகளும் ஒலி கிளப்புகின்றனர்! கணையொடு கணைகள் மோதிக் கனற்பொறிகள் பறக்கின்றன! வாளொடு வாள்கள் மோதிடும் ஒலியில் இடியின் முழக்கமும், அருவியின் ஓசையும் தாழ்கின்றன! பெருக்கெடுததோடும் குருதியாற்றில் மலைகள் உருள்வன போல் மதகரிகள் ஓடுகின்றன.

அதனில் அலை நுரைகள்போல், நிணத் துண்டுகள் மிதக்கின்றன. இருந்தும் "படை எடும்! எடும்!" எனும் ஒலியும், "கணை விடும்! விடும்!" எனும் ஒலியும் குறையவில்லை.

வாளேந்திய கைகள் தாளவில்லை. கணை எடுத்த மனிதர் குறி தவறவில்லை.

அங்கே ஜெயமங்கை அவன் தோளை முத்தமிடுகிறாள்! அவன் சுழற்றிய வாளும், எறிந்த வேலும், தொடுத்த கணையும், விடுத்த பிற படையும் வீழ்த்திவிட்டன ஆயிரம் வேழங்களை!

அவன் குன்றத் தோள்களை எதிர்த்து வீழ்ந்த ஆனைக்குன்றங்கள் ஆயிரம்!

அவன் புயவலிமுன்னே புதையுண்ட மதகரிகள் ஓராயிரம்!

புதுமையை வியந்து பாடும்புலமை மிக்கார்க்குத் தொழில் வந்துவிட்டது. தோலா நாவின் மேலோர்க்கு, தொல் புகழும் பல்வளனும் உடையான் கிடைத்துவிட்டான், பாட. ஆனை ஆயிரம் அமரிடை வென்றவன் மீது பாடப்படும் இலக்கியம்தான் பரணி. அப்படி, பரணிக்குரிய இலக்கணத்தோடு பாட ஒரு மறவன் கிடைததுவிட்டான்.

புலவர் உள்ளம் மகிழ்ந்து கூத்தாடுகிறது. ஓலையும் ஆணியும் வரலாறு குறிக்கின்றன. வேல்களால் செய்யப்பட்ட பரண்மீது நின்று போர்க்களத்தைக் கண்டு பாடுகிறார் கவிஞர். வீரம் பொங்கும் காட்சி, யாண்டு பலவானலும் மாண்டு மறையாத இலக்கியமாகிவிட்டது!

அந்த இலக்கியத்தை-திராவிடத்து புகழ்பாடும் தித்திக்கும் சேதியை-எத்திக்கும் புகழுடன் இருந்த காட்சியை, இன்றும் கண்டு மகிழ்கிறோம்! பழைமையில் நாம் கண்ட வெற்றிச் சின்னங்கள் பரணியின் மூலம் ஒளிர்கின்றன. இது பழைய கலிங்கத்துப் பரணி!

இப்போது ஒரு புதிய பரணியைக் காண்கின்றோம்; பாடுகின்ற புலவர் பாண்டிச்சேரி நகரம்!

புலவரும் பாடும் புலவர்கள்வாழும் அம்மூதூர், இன்று புதிய சேதியை-எதிர்ப்பை நீக்கிவிட்டு தி. மு க. எழுந்துவிட்ட சேதியைப் பாடுகிறது! சூழ்ச்சி ஆயிரம் தகர்த்து, ரணகளச் சிங்கங்களாய் எழுந்துவிட்டபுதுமைப் பரணியைப் பாடுகிறது பாண்டி! இது இனிக்கும் புதுமைவ தரும் இதயம் களிக்கும் புதுமை!

உணர்ச்சி அலைகள் மோதும் உவகைக் கடல் எழுகிறது. ஒளிர் வெண் முத்தங்கள் சிரித்துக் கொழிக்கின்றன. ஆர்வக் கற்றைகளைச் சிதறுகிறது இளைஞர் அணி! விழாவின் பொலிவும், போரின் வலிவும் ஒரு சேரக் காட்சியளிக்கின்றன. ஆம்! மறம் பொங்கும் வரலாற்றைப் படைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணிகளில் புதிய ஒரு அத்தியாயத்தை எழுதுகிறது, புதுவை.

அரசியல் வேட்டைக்காரர்களின்-சந்தர்ப்ப வாதக் கழுகுகளின் குகையாக விளங்கி வந்த புதுவையின் வாழ்வில், முன்பின் அது அறிந்திராத ஓர் உணர்ச்சிப் பிழம்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்திருக்கிறது. அதன் ஒரு பகுதியாய் இந்த மேத்திங்கள் 2-ம் நாளும் 3-ம் நாளும் அங்கே விடுதலைப் படையினர் சிறப்பு மாநாடு நடத்துகின்றனர்.

தனக்குத்தானே பல சிக்கல்களைப் போட்டுக்கொள்வதிலும், வலிய பல துன்பங்களுக்கு வரவேற்புக் கூறியதிலும் பாண்டிச்சேரி பல இன்னல்களைக் கண்டிருக்கிறது. அங்கே நமது கடமை மேலும் வலிவானதாக அமைய வேண்டியுள்ளது.

புதுவையின் வரலாறே ஒரு தனி வகையானது.

17-ம் நூற்றுண்டின் இறுதியில் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியத் துணைக் கண்டம், தினம் ஒரு சரிவை- அவலத்தைச் சந்தித்துக் கொண்டிருந்தது. எடுப்பார் கைப்பிள்ளையாய் இருள் கப்பிக் கிடந்த நாட்டை, மேலை நாட்டிலிருந்து வந்தோர் கொத்தத் தொடங்கினர். "வணிகம் செய்யவந்தோம்!" என்று அண்டியோர்க்கெல்லாம், ஆண்டு கொண்டிருந்த சிற்றரசர்கள் ஆதரவு காட்டினர்; வாடகைக்குப் பல துறைமுக நகரங்களை விட்டனர். அதுவே நமைத் தாழ்த்தும் வழிகளாயின.

ஆங்கிலேயரைப்போன்றே இந்த மண்ணில் வணிகக் கழகம் ஒன்று அமைக்க - தாமும் வளம் சுரண்டுவதற்குள்ளவாய்ப்புக்களை,பிரெஞ்சில் முதன் முதலில் நான்காம் ஹென்றி, ரிச்சலு, கோல்பெர்ட் போன்றோர் தாம் சிந்தித்தனர். கோல்பெர்ட்டின் விருப்பப்படி **1664-ல் கிழக்கிந்திய (பிரெஞ்சு) வணிகக் கழகம்** என்பதை அமைத்தனர். கம்பெனியின் தொடக்க கால நிகழ்ச்சிகள் இவற்றைக் காட்டின: அது தீர்ந்த ஆராய்ச்சியின் பேரில் அமையவில்லை உள்ள வாய்ப்புக்கள் முடிவாக அலசப்படவில்லை. அதனுல் முதலில் பெரும் லாபங்களோ, அவற்றைப் பெறுவதற்கான அறிகுறியோ தென்படவில்லை. பின்னர் 1667-ல் பிரான்கோயிஸ் காரன் என்பார் ஒரு புது முயற்சியைத் தொடக்கினார். அவருடன் மார்க்காரா என்பானும் வந்தான். பிரான்கோயிஸின் முயற்சியால் 1668-ல் இந்தியாவில் முதன் முதலாக சூரத்தில் பிரெஞ்சுக் கம்பெனியின் விற்பனை நிலையம் ஏற்பட்டது. மார்க்காரா, கோல்கொண்டா சுல்தானின் ஆதரவு பெற்று 1669-ல் மசூலிப்பட்டினத்தில் ஒரு வணிக நிலையத்தை அமைத்தான். பிரெஞ்சுக்காரர் தமிழகப் பகுதியில் முதன் முதலாகக் கைப்பற்றிய இடம் சென்னையில் உள்ள சாந்தோம் தான். இது 1672-ல் நடந்தது. ஆனால் மறு ஆண்டே சாந்தோமைக் காத்துவந்த கடற்படைத்தலைவன் டி லா ஹேய் என்பானை, டச்சுக்காரர் துணையுடன் கோல்கொண்டா சுல்தான் தோற்கடித்தான்; சாந்தோமை டச்சுக்காரர் காலடியில் வைத்து சரணுகதியடைந்தான் பிரஞ்சுக்காரன். சாந்தோமை இழந்துவிட்டதால் வேறு ஒரு துறைமுகப் பகுதியைத் தமிழகத்தில் பெற்றுத் தீர வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு வந்தது. 1673-ல் பிரான்கோயிஸ் மார்ட்டின், பெல்லாங்கொடி லெஸ்பினே ஆகிய இருவரும் வலிகொண்டாபுரம் என்ற ஊரில் இருந்த முஸ்லீம் ராஜப்பிரதிநிதியிடம் ஒரு சிற்றூரை விலைக்குப் பெற்றனர். பிரான்கோயிஸ் மார்ட்டின் 1674-ல் இதன் பொறுப்பை முழுக்க ஏற்றான்; அவனது திறமையால், அறிவாற்றலால், இந்தியத் துணைக்கண்டமெங்கும் குழப்பங்களும் அரசியல் போட்டிகளும் மிகுந்திருந்த அந்நாளில் அச்சிற்றூர் மிக முக்கியத் துறைமுகமானது. ஆமாம்! அந்தச் சிற்றூர்தான்-சேரிதான் இன்றையப் **பாண்டிச்சேரி**.

பிரித்தானியர் பிரெஞ்சுக்காரரை ஒழிக்க டச்சுக்காரர்களைத் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்த்தனர். 1693-ல் டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றினர். 1697-ல் நடந்த ரிஸ்விக் ஒப்பந்தத்தால் புதுவை பிரெஞ்சுக்காரர்க்குத் திரும்பியது. மார்ட்டின் மறுபடியும் இக்குடியேற்ற அமைப்பின் பொறுப்பை ஏற்றான். அவனது சலியா உழைப்பால் வெறும் சேரியாகக் கிடந்த இடம் 1706-ல் அவன் மாண்ட நாளில் 40000 மக்கள் வசிக்கும் நகரமாகி விட்டது. அப்போது ஆங்கில ஆதிக்கத்தில் இருந்த கல்கத்தாவின் ஜனத்தொகையோ வெறும் 22000 தான். 1707 முதல் 1720 வரை ஐந்து கவர்னர்கள் பாண்டிச்சேரியை இந்த பிரஞ்சுக்கம்பெனியிலிருந்து ஆண்டும், வெகுவாக கம்பெனியின் செல்வாக்குக் குறைந்தது. அவர்கள் மார்ட்டினது கொள்கைகளுக்கு மாறாக ஆட்சி செய்ததன் விளைவே இது மசூலிப்பட்டினம, சூரத், பண்டம் முதலியவை 18-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இழக்கப் பட்டன.



திரு. ச. சிவப்பிரகாசம்.

1720-ல் கம்பெனி, தான் பல இடங்களில் பெற்ற லைசென்ஸ்களையும் விற்கும் அளவிற்கு வந்தது. 1720-ல் கம்பெனியின் சட்டங்கள் திருத்தப்பட்டன. இந்தியாவில் நிரந்தரமாக நிறுவப்பட்ட கம்பெனியாயிற்று. லினேயர், டுமாஸ் முதலியோர் 1720-'42-ல் திறம்பட ஆண்டு முன் இழந்த வளத்தைப் பெற்று வந்தனர். 1725-ல் மாஹி கிட்டியது; 1739-ல் காரைக்காலும் விழ்ந்தது, பிரஞ்சுக்காரர்கள் காலடியில். 1720-41 ஆகிய காலத்தில் பிரஞ்சுக் கம்பெனி முழுக்க முழுக்க இந்திய அரசியலைப் பற்றி நினைக்கவேஇல்லை! சில கோட்டைகளைக் கட்டிக்கொண்டதும் சிறிய படைகளை வைத்துக் கொண்டதும். ஆங்கிலேயரிடமிருந்தும் டச்சுக்காரரிடமிருந்தும் தம்மைக் காத்துக்கொள்வதற்கேயன்றி வேறெதற்கும் அல்ல.

1742-க்குப் பின் லினேயரும் டுமாசும் பதவி நீங்கினீர். அதன்பின் தான் பிரெஞ்சுக் கம்பெனியில் அரசியல் ஆசைகள் உருவெடுத்தன. இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கி வைத்த இந்த ஆசைகளின் தந்தை டுப்ளே தான். மண்ணுரிமைப் போராட்டங்கள் பல இந்நாட்டில் பல தரப்பாருக்கும் நடந்தன அதுவரை இந்நாட்டு அரசியலில் பிரெஞ்சுக்காரரும்ஆங்கிலேயரும் தலையிடாதே இருந்தனர். "தங்கள் வணிகத்திற்கு ஏதும் இடையூறு ஏற்பட்டாலொழிய அன்னார் இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டும் காணுதே இருந்தனர்" என்று ஆர். சி. மஜூம்தார் என்பார் எழுதுகிறார். 1740 முதல் 1748 வரை ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் ஆஸ்த்திரியப் பிரச்னையை வைத்துப் போர் நடந்ததால் இங்கே இரு கம்பெனியாரது உறவுகளும் பாதிக்கப்பட்டன. இங்கே இருந்த பிரெஞ்சுக் கம்பெனியினர் ஆங்கிலக் கம்பெனியினருடன் ஒத்துப் போக நினைத்தும் பலன் அற்றுப் போயிற்று! கடல் பலத்தில் சிறந்திருந்தனர் ஆங்கிலேயர். பிரெஞ்சுக்கடற்படை ஒன்று வந்ததும் நிலை மாறிற்று. காலம் செல்லச் செல்ல, கர்நாடகப் போரும் வந்தது. ஆளுக்கொரு தரப்பில் சேர்ந்தனர், இரு வணிகக் கழகத்தினரும்; தாமும் இந்த மண்ணை ஆள வேண்டும் என்ற ஆவல் தலை தூக்கி நிற்கவே, அவரவர் அரசியல் லாபத்தை நாடினர். புகழ் பெற்ற ஆம்பூர்ச் சண்டை முதலியன நடந்தன. திருச்சி முற்றுகையில் (1753-ல்) பல புது வழிகளைக் கையாண்டு பார்த்த டுப்ளேக்கு அவர் தாயகத்தில் ஆதரவில்லை. அவரின் நடவடிக்கைகளை ஆராய, பிரெஞ்சிலிருந்து1-8-1754 அன்று காடிஹியூ என்பார் வந்தார். போக்குகள் மாறின. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஏற்கனவே தாம் கைப்பற்றிய இடங்களைமட்டும் வைத்துக்கொண்டு இனி ஒருவர்க்கொருவர் போரிடுவதில்லை என்பதாக ஒப்பந்தம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதன் பின்னே காலக் கோடுகள் கிழித்துச் சென்ற தடங்களால், பிரெஞ்சுக் கம்பெனிக்கு பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர், மாஹி முதலியன மிஞ்சின.

சமுதாய வளர்ச்சி தடைப்பட்டிருந்த அந்நாளில் அங்கு நிலவிய நிலைகளை அனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு முதலியவற்றுல் அறியலாம். அனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு, தமிழில் ஒரு வசனநூல்

— 11-ம் பக்கம் —

பெண் கொள்ள வந்தவர்!

தமிழ்ப்பித்தன்

அன்று செண்பகப் பேரியில் செண்பகநாத பிள்ளையின் வீட்டில் ஏக தடபுடலாக இருந்தது. இந்த மாதிரித் தடபுடல் அந்த வீட்டுக்குப் பழக்கப் பட்டதுதான் என்றாலும் அன்றையத் தடபுடல் வழக்கத்தைவிடச் சற்று அதிகமான அளவில்தான் இருந்தது. வீட்டில் உள்ளோர் ஒவ்வொருவரும் அங்கும் இங்கும் பறந்துகொண்டு திரிந்தனர். செண்பகநாதரின் மனைவி செல்லம்மாள் தனது கனத்த தேகத்தை வைத்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகத் திரிவதும், அடுப்பங்கரைக்கும் தலை வாசலுக்குமாக நடப்பதும் பார்ப்பவர்களுக்குப் பரிதாபத்தையே தந்தது. வீட்டில் உள்ள பெரிய திண்ணையில் அமர்ந்து கொண்டு வெளியே எட்டி எட்டிப் பார்த்தபடியே இருந்தார் செண்பகநாதர். வீட்டின் வெளியே உள்ள பூவரச மரம் காற்றுக்குத் தன் இலைகளை அசைத்தால் செண்பகநாதரின் காதுகளில், அது மாட்டு வண்டியின் மணியோசையாகக் கேட்கும். அவரது வீட்டிலுள்ளோர் எல்லோருடைய ஆர்வத்துக்கும் காரணம் இல்லாமலில்லை. செண்பகநாதரின் மகள் கமலத்தை. பெண் பார்ப்பதற்காக அன்று திருச்சியிலிருந்து ஒரு மாப்பிள்ளை வருவதாக இருந்தது தான் காரணம். புகைவண்டி நிலையத்துக்குத் தனது இரட்டை மாட்டு வண்டியை அனுப்பிவிட்டுத்தான் வாசலில், எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

செண்பகநாதரின் மகள் கமலம் வயதுக்கு வந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. மகளைப் பள்ளிஇறுதி வகுப்புவரை படிக்க வைத்தார். அதுதான் அவருக்கே பெரிய கஷ்டத்தைத் தந்துவிட்டது. பெண் பள்ளிஇறுதி வகுப்புவரை படித்திருந்ததால், அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய வரும் மாப்பிள்ளை குறைந்தது பி. ஏ. பட்டதாரியாகவாவது இருக்கவேண்டும் என்ற எண்ணம் செண்பகநாதருக்கும் அவரது மகள் கமலத்துக்கும் ஏற்பட்டுவிட்டது. இதன் காரணமாகச் சொந்தத்தில் பெண் கேட்க வருவோர் குறைந்துவிட்டார்கள். கமலத்தின் தாய்மாமன் ஒருவன் உள்ளூரிலேயே இருந்தான். அவனது தாய் செல்லம்மாளுக்குத் தன் தம்பி தருமனுக்கே தன் மகளைக் கொடுக்கலாம் என்று நெடுநாள் ஆசை. ஆனால் செண்பகநாதர்தான், 'அவன் படிப்பில்லாதவன், நாலாம் வகுப்புக்கூடத் தேறவில்லை' என்று சொல்லி, செல்லம்மாளின் ஆசையை நிராசையாக்கிவிட்டார். செல்லம்மாள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. காரணம் தன் கணவர் ஒரு முறை முடிவு செய்து விட்டாரென்றால், அதை யாராலும் அசைக்க முடியாது என்பது அந்த அம்மாளுக்குத் தெரியும்.

செண்பகநாதரின் வீட்டில் பெண் இருப்பதைத் தெரிந்து கொண்டு வேறு சிலர் பெண் பார்க்க வந்தனர். பல மாப்பிள்ளைகள் அந்த வீட்டுக்கு 'விஜயம்' செய்திருக்கின்றனர். ஆனால் அனைவரும் செண்பகநாதர் வீட்டுச் சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு, 'ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன்' என்று சொல்லிப் புறப்பட்டு விடுவார்கள். அவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தபிறகு, செண்பகப்பேரி ஊரையும், செண்பகநாதரையும் அடியோடு மறந்துவிடுவார்கள். இந்த மாதிரி நிகழ்ச்சிகளை அடிக்கடிச் சந்தித்ததும் செல்லம்மாளின் மனம் தவியாய்த் தவித்தது; ஆனால் செண்பகநாதர், கெத்து விடாமல் இப்படி நிகழ்ச்சிகள் நடந்ததையே மறந்துவிட்டுத்தைரியமாக இருப்பார். என்றாலும், ஒவ்வொருவரும் வந்து வந்து, பிறகு ஓடியே போய்விடுகிறார்களே - இதற்குக் காரணமென்ன என்று மட்டும் அவரது உள்ளம் சதா யோசித்துக்கொண்டிருக்கும். அவர் யோசித்துக்கொண்டிருக்கும் நேரத்திலே, வீட்டின் உள்ளே கமலத்தின் கண்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கும். 'கல்யாணம் ஆகாமலேயே இருக்க நேர்ந்துவிடுமோ' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனம் நோவாள். மகளின் நிலைமையை எண்ணி, செல்லம்மாளும் கண்ணீர் விடுவாள். அதைத் தவிர அவளால் வேறு என்ன செய்யமுடியும்?

ஒருநாள் செண்பகநாதர், வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் இருந்தார். அப்போது தன் மனைவி செல்லம்மாள் அருகில் வந்து நெடுநேரமாக நின்றுகொண்டிருப்பதைக்கூடக் கவனிக்கவில்லை. செல்லம்மாள் நெடுநேரம் நின்றதால் அவளது கால்கள் அறப்போர் செய்ய ஆரம்பிக்கவே, தொண்டையை ஒரு முறை கனைத்துக்கொண்டு, 'என்னங்க' என்றாள். அந்தச் சத்தம் கேட்டுத் திரும்பினார் செண்பகநாதர்.

"இப்படியே இருந்தா என்னங்க அர்த்தம்? வருஷம் ஏழாகப்போகுது கமலம் பெரிய மனுஷியாகி! அந்தப் பொண்ணு தன் விதியை நெனச்சுச் சதா அழுதுகிட்டே இருக்கு! அவ கூடப் படிச்ச பொண்ணுங்களுக்கு எல்லாம் கல்யாணம் ஆகி ஒவ்வொண்ணும் ரெண்டு மூணைப் பெத்துக்கிட்டு இருக்குதுக! இவ விதி என்னடான்னா இப்படி இருக்கு. இதுக்குத்தான் என் தம்பிக்கே தந்திடலாம்னுக்க... அது ஒங்களுக்குப் பிடிக்கலே' என்று சொன்னாள் செல்லம்மாள். அவ்வளவுதான், முதலில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு வந்தவர். 'தன் தம்பிக்கு' என்று செல்லம்மாள் சொன்னதும் கொதித்தெழுந்தார்.

"இந்தா பாரு செல்லம்! கமலத்துக்கு மாப்பிள்ளை இனிமே ஒண்ணும் பொறந்து வரப்போறதில்லை. எங்கேயோ ஒரு மூலையிலே அவனும் பொறந்து வளந்துருக்கான். நல்ல மாப்பிள்ளை கெடைப்பான். அவசரப்பட்டு ஒன் தம்பிக்கு என் பொண்ணைத் தந்துட மாட்டேன். அதைவிட என் பொண்ணு கல்யாணம் ஆகாமெ கன்னியாவே இருந்துடுவா" என்று கோபமாகக் கூறினார். இனி அங்கிருந்தால் தன் கணவர் பேசுவதை விட்டுவிட்டு அடித்தாலும் அடித்து விடுவார் என்றுவீட்டுக்குள் போகச் சித்தமானாள்.

'சார் போஸ்ட்' என்ற குரல் கேட்டு, செல்லம்மாள் திரும்பினாள். செண்பகநாதரும் எதையே ஆவலுடன் எதிர்பார்த்தவர்போல் எழுந்து சென்று தபாலை வாங்கினார்: பிரித்தார்; பார்த்தார்; அவரது மனதில் ஒரே சந்தோஷம். வேறொன்றுமில்லை; திருச்சியில் பெரிய செல்வந்தராக இருக்கும், அவரது பால்யகால நண்பர் பரமசிவம் தன் அண்ணன் மகன் அபிநய சுந்தரம் பி. ஏ.-க்கு செண்பகநாதரின் பெண் கமலத்தைக் கேட்டு எழுதியிருந்தார். அத்துடன் அபிநயசுந்தரம் இன்னும் இரண்டு தினங்களில் செண்பகப்பேரிக்கு பெண்ணைப் பார்க்க நேரில் வருவான் என்றும், இந்த முறை கட்டாயம் கமலத்துக்குத் திருமணம் நடந்துவிடும் என்றும், தானும் விரைவில் அங்கு வருவதாகவும் எழுதியிருந்தார். அவர் ஆவலுடன் கடிதத்தைப் படிப்பதைப் பார்த்துவிட்டு, செல்லம்மாளும் ஏதோ நற்செய்தி என்று யூகித்தாள். அவள் யூகத்துக்கு வேலை வைக்காமல், அவரே முழு விபரத்தையும் சொன்னார். மாப்பிள்ளை பி. ஏ. என்று கடிதத்தில் கண்டிருந்தது அவரது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது

செல்லம்மாள் அப்போதிருந்தே 'என்ன பலகாரங்கள் செய்வது?' என்று யோசிக்க ஆரம்பித்தாள். ஸோமாஸ் செய்யலாம் என்று நினைத்தாள். உடனே. 'சே சே! ஸோமாஸ் செய்ததனால்தானே அன்னிக்கு அந்த சொக்கிகுளம் மாப்பிள்ளை முடியாமப் போச்சு. வேறெ எதாவது செய்யலாம்' என்று முடிவை மாற்றிக்கொள்வாள். 'பாதாம் அல்வா செய்யலாமே' என்று எண்ணுவாள் அதற்குள், 'அன்னிக்கு பாதாம் அல்வா செய்து வர்றதுக்கு முந்தித்தானே அந்தப் பாழாப்போற தாராபுரம் மாப்பிள்ளை ஓடிப் போனான்' என்று நினைத்துக் கொண்டு 'வேறெஏதாவது செய்யலாம்' என்ற முடிவுக்கு வருவாள். அவளது குழப்பம் கடைசியில், ஒரு வழியாக ஓய்ந்து "கோதுமை அல்வாவும் கோயம்புத்தூர் போண்டாவும்" செய்வது என்ற முடிவைத் தந்தது.

திட்டப்படி அல்வா தயாராகிவிட்டது. போண்டாவை எண்ணெய்ச் சட்டியில் போட்டுவிட்டுத்தான் தலைவாசலுக்கும் அடுப்பங்கரைக்கும் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தாள். ஒரு முறை வாசலுக்கு வந்துவிட்டு உள்ளே சென்றிருக்கிறாள்; வாசலில் 'ஜல் ஜல்' என்ற ஒலியுடன் வண்டி வந்து நின்றது. திண்ணையிலிருந்த செண்பகநாதர் துள்ளி எழுந்தார் வீட்டுக்கு வரப்போகும் மருமகனை வரவேற்க வெளியே வந்தார். அவர் எதிர்பார்த்தபடி மாப்பிள்ளை சூட்டும் கோட்டும் போடாமல், சாதாரண வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். மேல்நாட்டு உடைகளில் மாப்பிள்ளைக்கு வெறுப்புப் போலும் என்று எண்ணிக் கொண்டார். இப்படித்தான் இருக்கவேண்டும் என்று பாராட்டிக் கொண்டார்.

'வாருங்கள்! வாருங்கள்' என்று புன்னகையுடன் வரவேற்றார். அபிநயசுந்தரம் பி. ஏ.யும் புன்னகையுடன் 'வணக்கம்' சொல்லியவாறு வீட்டுக்குள்ளே நுழைந்தார்.

தமக்காகப் பிரத்தியேகமாகச் சொல்லித் தயாரிக்கப்பட்ட பவானி பட்டு ஜமக்காளத்தை, திண்ணையில் விரிக்கச் சொன்னார் இருவரும் அமர்ந்தனர். செண்பகநாதர் தமக்கும் அபிநயத்தின் சிற்றப்பா பரமசிவத்துக்கும் உள்ள நட்புறவைப் பற்றி 'விஸ்தார'மாகச் சொன்னார். அபிநயமும் சிற்றப்பா ஏற்கனவே சொல்லியிருப்பதாகச் சொன்னான்.

வீட்டுக்குள் அழைத்துச் சென்றார் செண்பகநாதர். சிற்றுண்டி தரப்பட்டது. கமலமே பரிமாறினாள். பெண்ணை நன்றாகப் பார்த்துக் கொண்டான் அபிநயம். அவனுக்கும் பிடித்துப் போய்விட்டது. சிற்றுண்டி விஷயங்கள் முடிந்தன. வெளியில் வந்தனர்.

— 10-ம் பக்கம் —

சீறடிச் சிலம்பின் சீற்றம்

பொழுது போகவில்லையே என்று புத்தகங்களைப் புரட்டுவது வழக்கம். அன்று என் நினைவெல்லாம் செந்தமிழ்ச் செல்வராம் இளங்கோ அடிகளின் இலக்கியச் செல்வத்தையே நாடிற்று. வெறும் சிலம்புகளை வைத்துக்கொண்டு சிலம்பாட்டம் ஆடுகின்றாரோ என்று எண்ணியதுண்டு. உலகெல்லாம் உவக்கும் வகையில் உள்ளமெல்லாம் இனிக்கும் வகையில் காப்பியம் படைத்த பெருமை இளங்கோவுக்கே உண்டு என்று அறிஞர் கூறுவர். அத்தகைய பெருமைதான் என்ன என்பதை எண்ணினேன். எழுத்துக்கள் உருவாகத் தொடங்கின.

கோவலன் வாழ்வு மூன்று பெரும் அதிர்ச்சி முனைகளைத் தொட்டது—புகாரிலே பிறந்து அழகுச் செல்வியாம் கண்ணகி நல்லாளைக் கைப்பிடித்து வாழ்ந்த இன்ப வாழ்வு; இடையிலே ஆட்டத்தைக் காட்டி அழகால் வாட்டிய மாதவியுடன் மகிழ்ந்த வாழ்வு; சென்ற பாதை சீரற்றது எனத் தெரிந்து மீண்டும் தன் வாழ்க்கை விளக்காம் கண்ணகியை அடைந்து பொருள் பெற மதுரை சென்று மாண்ட வாழ்வு—என மும்முனைப் போராட்டமாக அமைகின்றது.

கண்ணகி-மாதரார் தொழுதேத்தும் விளங்கிய பெருங் குணமணி கோவலனைக் கொண்ட நிலை, மணாளன் உயிர் வாழ்ந்தும் உயிரற்ற வாழ்வு படிந்த அவல நிலை, மீண்டவன் காவலனால் மாண்டவனைப் பிரிந்த நிலை—எனச் சோகச் செய்திகளின் சுவைக்களனாய் விளங்குகின்றது.

மாதவி—தன் அழகால் வலையில் வீழ்ந்த மான் உண்டு என அறியாத அரிவை. ஆடலும் பாடலும் அழகும் அமையப் பெற்று மன்னவன்முன் ஆடி, கோவலனைத் தன்பால் அன்பு கொள்ளச் செய்து மனையகம் மறக்கச் செய்த நிலை, கோவலனைப் பிரிந்து வேறு காவலனை விழையாமல் வாழ்வறம் பேணிய நிலை. மாண்ட கோவலன் செய்தி கேட்டு மாதவி மகளாம் மணிமேகலை நலம் கருதி வாழ்ந்த வாழ்வு—என இன்பத்தை இடையீடு இன்றிப் பெற்றதால் முடிவில் துன்பத்தோடு முடிகின்றன.

சிலம்பு—என் எண்ணம் முழுவதையும் ஈர்த்துக்கொண்டது இதுதான்! சிலம்பும் மூன்று! வியப்பிலும் வியப்பே. அறச்செல்விகள்—அன்பு விளக்குகள் அணிந்த சிலம்புகளும் மூன்று. கற்பரசி கண்ணகி-கோப்பெருந்தேவி-ஆடலரசி மாதவி. முப்பெருந் தேவியர் சிலம்புகளின் ஒலியால் சிதறுகின்ற செய்திகள் பலரது வாழ்விற்குப் பகையொலியாய் அமைகின்றது.

மாதவியின் சிலம்பு ஒலி கண்ணகி நல்லாளைக் கையிகந்து மனையகம் மறக்கச் செய்தது; பாண்டிமாதேவியின் சிலம்பு ஒலி-கோவலனைக் குற்றமுடையவன் எனக் குற்றஞ் சாட்டிக் கொலைப்படுத்தியது; கண்ணகி நல்லாளின் சிலம்பு ஒலி—மாண்ட தன் மணவாளன் மாசற்றவன் என நீதி கூறி நெறி பிறழ்ந்த வேந்தனை உயிரிழக்கச் செய்தது. அவைமட்டுமா? வாழ்க்கைப் படகில் இன்பம் பெறுதற்குச் செயலாற்றிய இரு பெருங் காதலர்களின் பெற்றோர் தம் வாழ்வையும் அன்றே சிதறடித்தது! என்னே இச்சிலம்புகளின் சீற்றம்!

காப்பியம்—சிலப்பதிகாரத்தின் உட்பிரிவுகளும் மூன்றே. மூன்று வேறுபட்ட உணர்ச்சிகளின் நிலைக்களனாக அமைந்து உண்மையிலேயே உள்ளத்தை உலுக்குகின்றது. புகார் காண்டத்தில் மணவிழாவும் கானல் வரியும் இன்ப ஒலியையும், மதுரைக் காண்டத்தில் மாண்புறு கண்ணகியின் வழக்குரைச் செய்தி—கோவலனின் கொடும் பிரிவு சோக ஒலியையும், வஞ்சிக் காண்டத்தில் வனப்புறு குரவைக் கூத்தும் வன்சொல்லரை—வடவரை நாவடக்கிய வென்றியும், கண்ணகி-கோவலன் சிறப்பும் கண்ணகியின் கோவிலும் வீர உணர்வை வெளிப்படுத்துகின்றன.

எல்லாம் மூன்று-மூன்றில் என்னதான் ஈடுபாடு கொண்டாரோ, அறியேன். என்றாலும் வியப்பே! முழுக் காப்பியத்திலும் கண்ணகி ஓடி, ஆடி, அலைந்து வருகின்றாள். ஆனால் அவள் பெயரிட்டழைக்கவில்லை. சிலப்பு! புகார்க் காண்டத்தில் கண்ணகி "சிலம்புள கொண்ம்" என்று கூறுகிறாள். வாழ்க்கை ஒளிபெற்றுத் திகழ வழிகாட்டச் சிலம்பைக் காட்டினாள்—ஆனால்...! அந்த வழிகாட்டிதான் ஒளி நீங்கும் சிலம்பாய் மாறிற்று. அவலத்திலும் அவலம்!

சிலம்பு இல்லை என்றால்...முற்றுப்புள்ளி இல்லை எனலாம். இருண்ட வாழ்க்கையில் ஒளி ஏற்ற முயன்றதும், மருண்ட நோக்கங் கொண்ட மாதவி வாழ்வை மங்கலமிழக்கச் செய்ததும், கோல்கோடா மன்னவனைக் கொன்றதும்—கற்பரசி கண்ணகியைக் கண்ணீர் அரசியாக்கியதும் வெறும் சிலம்புதான்.

சிறந்த இலக்கிய மேதை என்பவர்கள் ஒரு சிறு கருப்பொருளை வைத்துப் பெரும் உணர்ச்சிகளை மோதவிட்டுப் பயன் காணுவர் என்பது ஓர் அறிஞர் கருத்து. பல்வேறுபட்ட குண நலன்கள் ஊடாடும் சிலப்பதிகாரத்தில் உயிரற்ற ஒரு பொருள் பெருஞ்செயல்களைப் புரியும் முறை விந்தையூட்டுவதேயாகும்.

கோவலன் : ஓர் எரிமலை. கொந்தளிக்கும் எரிமலை வெடித்துத் தானும் வடிவிழந்து தன் மாட்டுள்ளோரையும் வாழ்விழக்கச் செய்யும். இது இயற்கையின் விளைவு. கோவலன் உணர்ச்சிகளின் இருப்பிடம், உணர்ச்சியின் முனையில் தானும் கெட்டுத் தன்னை நாடியோர் அனைவரும் சிறப்பிழக்கச் செய்கிறான். தன்னை அறியாமல் செய்கின்ற சில தவறுகளால் பெருந் தீங்குகள் பெருகும் என்று கோவலன் அறிந்தானில்லை; அறியும் அளவுக்கு, சிந்திக்கும் அளவுக்கு ஏற்ற பொறுமை அவனிடத்தில் இல்லை. இது ஒன்றுதான் கோவலனின் குறைபாடு எனலாம்.

மாதவி : பிறப்பால் தாழ்குலத்தவளேயாயினும் வாழ்வால் உயர் குலத்தே நிலை பெறுபவள். தன் அழகும்—ஆடலும்—பாடலும் கோவலனைத் தன்பால் இழுத்தன என்றறியாப் பேதை. கொண்டவன் ஒருவனுடன் வாழ வேண்டும் என்ற முடிவில் இருந்தவள் என்பதைக் கோவலன் பிரிவின் பின்னர் வேறு காவலனை நாடாத பெற்றி காட்டுகின்றது. ஊடல் இன்றிக் கூடல் இல்லை. எனவே கானல் வரியில் ஊடினான் கோவலன் என்றெண்ணித் தானும் ஊடுவதால் கொடுமை அவள் வாழ்வில் நடமாடத் தொடங்கிற்று எனலாம் நல்ல குணமும்—பண்பும்—அறிவும் பெற்றவள் மாதவி என்பதை மணிமேகலையைத் தன் குலத்தொழிலினின்று நீக்கியதால் உணர முடிகின்றது. கண்ணகியைப் போன்று உரிமையைப் பெறாவிட்டாலும் அன்பால், பண்பால் கோவலனிடம் உரிமையைப் பெற்றுவிட்ட பெருமை மாதவியையே சாரும்.

கண்ணகி : பெருங் குணங்களை ஒருங்கே கொண்டவள். என்றாலும் அருங் குணங்கள் மட்டும் கணவனை அமைதிப்படுத்தா என்பதை அறியாதவள். பொறுமையின் பிறப்பிடம். குடிவளர, வாழ, மகிழ ஒரு மழலையைத் தராத குறை தவிர வேறு எக்குறையும் இல்லாத ஏந்திழை. நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே எனக் கூறும் வழி வந்த தமிழ் மறத்தி. காவலன் கடமை தவறியமைக்கு, கணவனை இழந்த கொடுமைக்கு ஏற்ற செயல் செய்த ஏந்திழை. பொறுத்ததெல்லாம் போக, பொங்கி எழுந்தால் நாடே எரிந்து விழும் என்பதை எடுத்துக் காட்டும் கற்புத் தெய்வம். உணர்ச்சிகள் ஒடுக்கிய வேளையில் கடுவினை செய்த என் குற்றத்தால் அன்றோ மாட மதுரை மக்கள் மாண்டனர் என்று வருந்தும் நிலையில் கண்ணகியின் பெருந்தன்மை புலனாகின்றது.

முப்பெரும் பாத்திரங்கள் மூன்று வேறுபட்ட உணர்ச்சி கொண்டவை. என்றாலும் சிலம்பால் விளைத்த சீற்றம் ஒருமைப்படுத்தாமல் பிரித்துவிட்டது என்றால் பிழையில்லை. மற்றையப் பாத்திரங்கள் காப்பியம் வளர்வதற்குத் துணை செய்து சிறப்புறுகின்றன. வேறுபட்ட உணர்ச்சிகளை விரிவாகக் காட்டுவன இவை மூன்றேயாகும்.

உணர்வற்ற சிலம்பு உணர்வுடை மாந்தர்கள் வாழ்வில் ஊடாடி ஊறு விளைக்கின்றமை—இளங்கோ அடிகளின் இலக்கிய அறிவிற்கு ஒரு பெரும் வெற்றி என்றால் புனைந்துரையாகாது.

—இராம. இராமநாதன்
பி. ஏ. (ஆனர்சு),
தியாகராசர் கல்லூரி, மதுரை.

தொடர்ந்து போராடும் தோழர் ஜேசுபாதம்!

தோழர் ஜேசுபாதம் அவர்கள் சென்னையில் கழகத்திற்குக் கிடைத்த உழைப்பாளிகளுள் ஒருவர். தேர்தல் களத்தில் காங்கிரசாருக்கு அடிக்கடித் தொல்லை கொடுப்பவர். கடந்த பொதுத் தேர்தலிலும் காங்கிரசை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டவர் இவர். சில நூறு வாக்குகள் மேலும் இருந்திருந்தால் வென்றிருப்பார். தேர்தலில் வாய்ப்புக் கிடைக்காவிடினும் தளராது கழகப் பணிகளில் ஈடுபட்டார். சென்னைப் பெருநகராட்சித் தேர்தல்கள் வந்ததும் 91-ம் வட்டத்தில் போட்டியிடப் பணிக்கப் பட்டார். சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் ஆன அற்புதராஜ் என்பவரைத் தோற்கடித்து வாகை சூடியிருக்கிறார். பரபரப்பை ஊட்டிய வெற்றியைத் தேடித் தந்த தோழர் ஜேசுபாதத்தின் தொண்டுள்ளம் வாழ்க! வளர்க!



"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 2—5—59 ‖ இதழ் 46

இந்தியை அகற்றிவிடு!
அல்லால்
எந்தமிழைக் கொன்றுவிடு!

"மலையைக் குடைந்து எலியைப் பிடித்த மாவீரர்கள் வருகின்றனர். பராக்! பராக்! கடலைத் துளைத்து அலசிச் சிறுகடுகைக் கண்டெடுத்தோர் வருகின்றனர் பராக்! பராக்! காற்றைப் பிசைந்தெடுத்துக் காகிதக் கோட்டை கட்டிவிட்டோர் வருகின்றனர் பராக்! பராக்!"

"ஆங்கிலத்தொரு தீங்குண்டு என்பதை அவனியோர்க்கு உணர்த்திய வீங்கு தோள் செல்வங்களே! பாரதமாம் தேசமதில் பாதகமே செய்து வரும் பரங்கி மொழியை வெளுத்துக் கிழித்துக் குப்பையில் போட்டுவிட்ட குன்றத் தோளர்களே! "அன்னை இந்திப் பாலிருக்க ஆங்கிலப் புட்டிப்பால் எற்றுக்கோ?" என்ற ஆராய்ச்சிக் கற்றைகளே! வருக! வருக! வருக! நும் வரவால் வாழ்வு பெற்றோம் யாம்! பொன்னனைய நேரத்தையும் தியாகம் செய்து வருங்காலம் ஒன்றே கனவில் கொண்டு திட்டம் வடித்தெடுத்த உங்கள் பொற்றாள்கள் பட்டதால், அத்துணையும் மைத்தாள்களாயின! அதன் வானமளாவிய பெருமையையும், காங்கிரஸ் மாளிகை முகட்டினை முட்டிய திறமையையும் என் சொல்லி வாழ்த்திடுவோம்! ஆகா, நீங்களன்றோ ஞான தேசிகர்கள்! பாரத சாரதிகள்! உங்கள் உடம்பும் உயிரும் உலகம் உள்ளளவும் இருக்கட்டும்; உங்கள் கூற்றை மறுப்போரைக் கொல்லட்டும்!

வார்த்தைச் சீமான்கள் வந்ததும், வழிவிட்டும் வாழ்த்துச் சொல்லியும் இப்படி மகிழ்ந்திருக்கும் சில ஒன்று மற்ற பிறவிகளைக் காண நேரிட்டது, கடந்த கிழமை!

இந்தியை எப்படியும் நுழைத்துவிட, ஒரே ஆட்சிமொழியாக்கிவிட, படாத பாடுபடும் இந்திய அரசினர் அமைத்தனர், "ஆட்சிமொழிக்குழு" என்ற ஒன்றை. சிக்கல்களைத் தட்டிக் கழிப்பதற்கும், திசைமாற்றி விடுவதற்கும் அவர்கள் கையாளும் தந்திர முறைகளுள் ஒன்றுதான் குழுக்கள் அமைத்தல். மக்களது கணைகளிலிருந்து தப்பிக்கொள்ள அன்னார் கையாண்ட பல முயற்சிகளுள் ஒன்றுதான், ஆட்சிமொழிக்குழு அமைத்தது ஆனால் மக்களின உணர்ச்சிகளைத் தடுத்திட அவர்கள் கையாளும் தந்திரமே இது என்று ஊரார் நன்கு உணர்ந்துவிட்டனர்.

இத்தனை வெறுப்புணர்ச்சிக்கிடையிலும் அக்குழுவினர் சுற்றாத இடமெல்லாம் சுற்றினர்; சொல்லாத சொலலெல்லாம சொல்லினர். ஆனால் கேட்க வேண்டியதைக் கேட்பதிலும், அறிவிக்கத் துணிந்தோரை அணுகுவதிலும், அறிவிக்கப்பட்டவற்றை ஆராய்வதிலும் அவர்கள் தவறிவிட்டனர். அதன் விளைவாகக் குதித்திருக்கும் மூளிப்பிண்டம்தான் ஆட்சிமொழிக் குழுவின் அறிக்கை.

இந்திக்கு இரு வழியில் பெருமை தேட நினைத்தனர்; ஒன்று அதைத் தேசிய மொழியாக்குவது; மற்றொன்று அதை ஆட்சிமொழியாக்குவது.

ஆங்கிலம் அந்நிய மொழி. ஆகவே அது தேசிய மொழியாக முடியாது, என்கின்றனர். உண்மை; ஒப்புக்கொள்ளலாம். இந்த நாட்டின் மக்களினதல்லாத ஒன்றை தேசிய மொழி எனல் தவறுதான். ஆங்கிலத்தைப் போலவே இந்தியும் நமக்கும் மாற்று மொழிதான்; தமிழைத் தவிர வேறு மொழி நமக்கு தேசிய மொழியாக முடியாது என்பதும் ஆள்வோர்க்கு விளங்கின.

ஆட்சிமொழி என்ற மதிப்பாகிலும் சாக்கப்பட வேண்டுமென்பதற்காக, ஆயிரம் ஆயிரம் சூழ்ச்சிகளைச் செய்ததன் பயன்தான் ஆட்சிமொழிக் குழுவும் அதன் அறிக்கையும். 1965-க்குள் அரசியல் சட்டத்தில் குறித்தபடி இந்தி ஆட்சி மொழியாகிவிட வேண்டும். குடியரசுபற்றிய பதவிகளுக்கெல்லாம் இந்தியிலேயே தேர்வுகள் நடைபெறும். இப்படிப் பல சுமைகள் தென்னாட்டவர்மீது ஏற்றப்படுகின்றன. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் தாம் இதனால் லாபம் பெறுவர். பிறமொழியினர்க்கு ஒரு லாபமும் இல்லை. ஆட்சிமொழி என்ற தகுதியால் பலவாறும் இந்தி வளர்ச்சி அடையும்; பிறமொழிகளுக்கு வளர்வதற்கு எவ்வகை வாய்ப்பும் இல்லை. இந்தியாவின் தேசிய மொழிகளாகக் கணக்கிடப்பெற்ற பதினான்கு மொழிகளுக்கும் ஒத்த வாய்ப்பளிக்கப்பட்டால்தான், அவையனைத்தும் வளரமுடியும். இப்போதுள்ள ஆங்கிலம் நமக்குப் பல்லாண்டுக் காலம் பயன்பட்டது; பழகிவிட்டது; உலகெங்கும் செல்வாக்கில் உள்ளது. அதையே ஆட்சிமொழியாக மேற்கொண்டால் மேலும் எத்துணையோ பயன்கள் உள.

"அதெப்படி முடியும்? அரசியல் சட்டத்தில் அவ்வாண்டுக்குள் இந்தி ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமே! எழுதிய எழுத்தை மாற்றமுடியுமா?" என்போர் ஒரு சாரார். அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக எதையும் மாற்றமுடியாது என்பதில்லை; திருத்தப்படக்கூடாத ஒன்றல்ல அரசியல் சட்டம்! இந்திய அரசினர் ஏற்கனவே ஜமீன்தாரிகளை ஒழிக்கும்போது அதற்கு நஷ்டஈடு தருவதற்கேற்ற வழியில் அரசியல் சட்டத்தைத் திருத்தவில்லையா? விமானப் போக்குவரத்தை, தேசியமயமாக்குகையில் இடையூறாய் இருந்த பகுதிகளுக்கு மாறாகத் திருத்தவில்லையா? அல்லாமல் "மக்கள் வெறுப்பிலிருந்து இதைத் தள்ளிவைப்பதுதான் நல்லதென்றால் சளைக்கமாட்டேன்!" என்பதாக, கௌஹாத்திக் காங்கிரசில் நேரு பேசினாரே! உறுதிமொழிந்தாரே! அவை எல்லாம் எங்கே? அதற்குப்பின் நாட்டில் இந்தி எதிர்ப்பு மாண்டுவிட்டதாக நினைக்கிறாரா? "வருக! வருக! என வாழ்த்துப்பாடி. மாமா நேருவின் முகம் தெரியும்படி தீவட்டி பிடித்துவிட்டனரா? அந்த வேலைக்கென்று தனித் திறமையும் அனுபவமும் பெற்ற ம. பொ. சி. கழகமும் நகராட்சி முடிவுகளில புகுந்துவிட்டதே! அன்றிருந்த அருவருப்பே இன்றும் இருக்கையில் நிலைமை மாறிவிட்டதாகக் கனவு காண்பதும், காலத்தைத தள்ளிவைக்க வேண்டாமெனக் கருதுவதும் தவறு!

அடுத்து மற்றொன்று. அது ஆசை வார்த்தைகள் காட்டும் வகையில் அமைந்துள்ளது. "45 வயதுக்குள் உள்ள அலுவலர் மட்டும் இந்தி கற்றால் போதும்; பிறரை நாங்கள் கொடுமைப்படுத்தமாட்டோம், இந்தியைக் கற்றாக வேண்டுமென்று!" என்பதாக அது உள்ளது. இந்திக்குக் குறிக்கப்பட்டுள்ள காலம், இன்னும் ஆறு ஆண்டுகள் 45 வயது நிறைந்தோர் ஓய்வெடுப்பதற்கு 11 ஆண்டுகள் தாம் உள. அவர்கள் தாமாக இந்தியைக் கற்றுக்கொள்ளாவிடின், 6 ஆண்டுகளுக்குப்பின் கட்டாயம் கொடுமைப்படுத்தத்தான் படுவர். இந்தி தெரியாமல் உத்தியோகத்தில் எப்படி இருக்க முடியும்? இப்பொழுதே மறைமுகமாக வருமான வரித்துறை அஞ்சல்துறை ஆகியவற்றில் படிப்படியாக இந்தியின் ஆதிக்கம் நுழைக்கப்பட்டுவிட்டன. வாரத்திற்கு 3 மணி நேரம் அவர்கள் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனவும், 6 மாதத்தில் இந்தியிலேயே எழுதவும் படிக்கவும், கடிதத்தொடர்பு கொள்ளவும் வேண்டுமெனவும் வற்புறுத்தப்படுகின்றனரே! இதில் வயது வேறுபாடு இல்லாமல் இத்துறை ஊழியர் அனைவரும் வற்புறுத்தப்படுதலை நாம்அறியோமா? பின்னும் ஊழியர்கள்-45 வயதானோர்-வற்புறுத்தப்படமாட்டார்கள் என்பது எப்படி உண்மையாகும்?

மூன்றாவதாக, உணர்ச்சியும் ஊக்கமும் காட்டினால் இந்தி கற்பது கடினமன்று; இந்தி எல்லோருக்கும் எளிதில் விளங்கும் தன்மையில உள்ளது; எல்லா வளமும் செறிந்தது என்கின்றனர். இக்கூற்றும் பிழைபட்டதே. வடக்கத்திய ஆட்சியில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோரே தலையாய அலுவல்களில் வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறுள்ளோரும் இந்தியைப் பிழையற்றும் பொருளோடும் எழுத இயலாதிருக்கின்றனர். இந்தியைப பரப்பும் முயற்சியின் ஒரு பகுதியாக, வெளிநாட்டுத் தொடர்புகளை இந்தியிலும் வைத்திருக்கின்றனர். தூதர்களுக்குத் தந்தனுப்பப்படும் பதவி மடல்கள்கூட இந்தியிலேயே தரப்படுகின்றன. பண்டிதரின் அருமந்தத் தங்கையார்—"தங்கள் குடும்பமே தாங்குகிறது இந்தியாவை" எனத் தம்பட்டம் அடிக்காமல் அடிக்கும் விஜயலட்சுமியார் இரஷ்யாவுக்குத் தூதராக நியமிக்கப்பட்டுச் சென்றபோது பதவி நியமன மடல் ஒன்று தந்தனுப்பப்பட்டது. தில்லி அலுவலர் பலர் துருவித் துருவிப் படித்து சரிபார்த்து இந்தியக் குடியரசுத் தலைவரும் கையெழுத்திட்டனுப்பிய அம்மடலில் இரஷ்ய அதிகாரிகள் கண்டுபிடிக்கும் அளவுக்கு பல பிழைகள் இருக்கவே. அவர்கள் அதைச் சுட்டிக் காட்டினர். அம்மையாரும் அதை வெட்கமில்லாமல் வெளியில் சொன்னார்.பண்டிதர் பெருமான் ஆங்கிலத்தைக் கரைத்துக் குடித்தவர்தான். ஆனாலும் இந்தியைப் புகுத்துவதற்காக அவர் பல மேடைகளில்-தென்னக மேடைகளிலும் வெளிநாடுகளிலும் இந்தியிலேயே பேசியிருக்கிறார். அவ்வளவு வெறிகொண்ட அவரே பல நேரங்களில் திண்டாடியிருக்கிறார், பல ஆங்கிலச் சொற்களுக்கு நேரடியான இந்திச் சொல் தெரியாமல். மேடைகளில் பக்கத்தில் இருக்கும் பாதந்தாங்கிகளிடம் கேட்டிருக்கிறார் "இந்த ஆங்கிலச் சொற்களுக்கு இந்தியில் என்ன சொல்வது?" என்று. இவை போதும் அம்மொழியின் வளத்தையும் வலிமையையும் காட்டித்தர.

இவ்விடத்தில் ஆங்கிலம்பற்றி, 'தினமணி' கூறுவதைச் சிந்திக்கவும் கடமைப்பட்டுள்ளனர்.

> "ஆங்கிலர் இனி ஆட்சி மொழியாக நீடிக்க இயலாது என்பதற்கு கமிட்டி சொல்லியுள்ள காரணங்கள் முன்னுக்குப்பின் முரணானவை... வெகு நாளாகப் பழக்கப்பட்டு, பல வருஷம படித்த ஆங்கிலத்தையே சரிவரக் கையாளமுடியாதவர்கள், புதிதாக இந்தியைக் கற்றுக்கொண்டு, **தகுதியற்ற அம்மொழியை** ஆட்சித்துறை அலுவல்களில் ஆங்கிலத்தைவிட அதிகத் திறமையுடன் கையாள இயலுமா?"
>
> —'தினமணி'' 24-4-'59.

பாதகத்தார்-மன்னிக்கவும், பாரதத்தார்திருப்பணிகளுக்குப் பல்லாண்டு பாடும் கோயங்காவின் ஏடும் குமுறுகிறது. இங்கு வேரூன்றிவிட்ட ஆங்கிலமேசரிவரப் பிடிபடவில்லை என்போர், புதிய ஒரு மொழியைப் வலிவுள்ள தாக்கித் தாமும் அதைப் பின்தொடர்ந்து கற்கும் நாள், கடைப்பிடிக்கும் நாள் எவ்வளவாகலாம்?

சிந்தித்துச் செயல்படாததோடு, அடாதனவும் செய்திருக்கின்றனர். சில தொடைநடுங்கிகள் குழுவின்முன் "ஆமாம்சாமி"களாகிவிட்டனர். மற்றும் சிலர் அதிமேதாவிகளாயினர். சென்னை அரசினர் இரண்டாம் வகையில் இருந்தனர். "இந்தியுடன் ஆங்கிலமும் இருக்கட்டும்!" என்ற மேலான யோசனையைத் தந்திருக்கின்றனர், இந்த மேதாவிகள்.

தமிழ்மக்கள் அனைவரும் இடிவிழுந்து அடியோடு கெட்டுப்போக வேண்டுமென்று நினைத்தனரோ என்னவோ, இந்த அற்புதக் குழுவினரும் இதைத் தம் பாழ்த்தெடுத்த குரலெடுத்துப் பாடிக்காட்டி "தமிழகத்திலும் எங்கட்கு ஆதரவு இருக்கிறது, பாரீர்!" என்றிருக்கின்றனர். வங்கத்தவர்க்கிருந்த உணர்வும் அறிவும்ஊக்கமும் துணிவும், "சென்னைவாழ் பெரிய திருவடிகளுக்கு" இல்லாது போனதேன்? தட்டிக் கேட்கின்றனர் வங்கத்தினர். அன்னார் எதிர்ப்பை முழக்கியபோது சென்னை அரசும் முழக்கியிருந்தால் இந்நேரம இக்கொடுமை நிகழ்ந்திருக்குமா?

முடிவாகச் சொல்கிறோம். இந்தி எந்த உருவில் நுழைந்தாலும் அதை ஏற்றிடோம்! உயிருள்ளவரை இந்தத் தடித்தனமான முடிவை ஒப்பிடமாட்டோம்! மொழியின்மூலம் அடிமைகொள்ள நினைக்கும் வெறியர்களின் போக்கைக் கண்டிக்கிறோம். தினமணி எழுதியதுபோல், ரோஜாமேனிச் சீமான் நேருவின் கூலிகள் செய்த தடித்தனமான முடிவுகளை ஏற்க மறுக்கிறோம்!

இனிய ஒலியும் பழைய புலமையும், வளரும் திறனும் உதவும் வலிவும் கொண்ட கன்னித்தமிழ் மக்களே! உங்களை அறை கூவுகிறது குறைவு படைத்த இந்திமொழி! ஆண்டாண்டு காலம் ஆண்டாண்டு அனுபவம் பெற்ற தமிழ் பேசுவோரே! மாண்ட வட மொழியின் மண்டைக் கனத்தில் புழுத்த இந்தி மொழி மூண்டெழுகிறது; மூக்கறுப்பீரா? முன்விழுந்து தொழுதெழுவீரா?

விரைவில் முடிவு செய்க! காலங் கடந்தால், கட்டாயம் நீர் மாண்டொழிவீர்! ★

சிவகெங்கைச் சீமை

ஆளவந்த தோளழகன்

தமிழக வரலாற்றில் சிக்கல்களும் குழப்பங்களும் மிகுந்திருந்த நூற்றுண்டுகள் ஆகும் 18, 19-ம் நூற்றுண்டுகள். அரசுகள் கவிழ்வதும் எழுவதும் அன்றுட நிகழ்ச்சிகளாகிவிட்ட அந்த நேரங்களில் தான் மருதுபாண்டியர் தோன்றினர். இராமநாதபுர மாவட்டத்தில் அறுப்புக்கோட்டையின் கிழக்கே 18 கல் தொலைவில் உள்ளது முக்குளம் என்ற ஊர். அழகிய கிருதமால் ஆற்றின் கரையடுத்து அமைந்துள்ள இந்த முக்குளம், நரிக்குடி முக்குளம் எனப்படும். வரண்ட முகவை மாவட்டத்தில், ஓரளவு பசுமையுடன் திகழ்வன, நரிக்குடியும் அதனைச் சேர்ந்த முக்குளமும். முக்குளத்தில் வாழ்ந்த ஆனந்தாயி என்ற பொன்னாத்தாளுக்கும், மொக்கப் பழனியப்பன் சேர்வை என்ற உடையார் சேர்வைக்கும் 1748-ம் ஆண்டில் பிறந்த குழந்தையே பெரியமருது ஆவார். உடையார் சேர்வை தம்மனைவியுடன் இராமநாதபுரம் நகர்க்குக் குடியேறி அங்கு அப்போது ஆண்டு வந்த சேதுபதியான முத்துவிஜயரகுநாத தேவரின் அன்பைப் பெற்ருர். அதனால் உடையார் சேர்வை முகவை மன்னரின் படைத்தலைவரும் ஆனுர். குடும்பம் நாளொரு சிறப்பும் பொழுதொரு வெற்றியுமாகப் பெற்று வந்த அந்நாளில் பெரியமருதுவும் சின்னமருதுவும் வளர்ந்து வயது பெற்றனர். நாளடைவில் பெரிய மருது சிவகெங்கை அரசை அடைந்தார். அதனை ஆண்ட முத்து வடுகநாதர் மருதிருவரின் வலிமையையும் திறமையையும் தெரிந்தார். முத்துவடுகநாதரின் அமைச்சரானுர், பெரியமருது. முத்து வடுகநாதரின் வாழ்க்கை இறுதியில் ஆங்கிலப் பகையால் நிம்மதியற்றதாயிற்று. ஆங்கிலக் கர்னல் பான்ஷோர் என்பான் 1772-ல் முத்துவடுகநாதரின் மேல்படை எடுத்தான். ஆங்கிலேயர்க்கு, புதுக்கோட்டைத் தொண்டைமானின் உதவியும் கிட்டியது. முத்து வடுகநாதர் காளையார் கோவில்ல் தன் அரணை அமைத்துக்கொண்டார். டான்ஷோரின் பகை தம்மைக் கொத்திய ஞான்றும் மருது பாண்டியர் முத்துவடுகருக்குத் துணையாக நின்று போரிட்டார்.

பல்லாண்டுகள் கழிந்தன. சிவகெங்கைச் சீமையில் மறுபடியும் வேலுநாச்சியார் ஆட்சியும் அடுத்து மருதுபாண்டியர் ஆட்சியும் ஏற்பட்டன.

பிறந்த மண்ணில் இறந்த மக்கள் !

மருதுபாண்டியர் ஆட்சியின் தொடக்கம் அமைதியும் அன்பும் கொண்டிருந்தது. மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செங்கோல் ஓச்சினர். அறம் தவழும் இனிய காட்சி

களையே காண விழைந்த அன்னுர், நாடெங்கும் சத்திரங்களைக் கட்டினர்; குளங்களை வெட்டினர்; பாதைகளை அமைத்தனர்; கல்வியை வளர்த்தனர்.

வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறிச் செல்ல மருதுபாண்டியர் அமைத்த சத்திரங்களுள் பெயர்பெற்றது, நரிக்குடிச் சத்திரம். ஒரே நேரத்தில் 200, 300 பேர்கள் தங்கிச் செல்ல வசதியுள்ள இச்சத்திரத்தில் நாள்தோறும் வழிப்போக்கர்களுக்கு உணவு படைக்கப்பட்டது. தாம் பிறந்த ஊரில் அமைந்த இச்சத்திர நிர்வாகத்திற்காக மருதுபாண்டியர், 1785-ம் ஆண்டில் 12 கிராமங்களை, தானம் விட்டனர். நரிக்குடி முக்குளம், வீரக்குடி, கருமான் ஏந்தல், ஆதித்தன் ஏந்தல், நாலூர், நண்டுகாச்சி, தர்மம், ஆலங்குளம், மானூர், மேலப்பசலை, கீழப்பசலை முதலியன அவ்வூர்கள்.

அந்நாளில் கால் நடையாகவேனும் இராமேஸ்வரம் சென்று வருதல் தெய்வ நம்பிக்கையுள்ளோரின் பெருங் கடனுக இருந்தது. தமிழகத்திற்குப் போந்த ஆந்திரர்களுள் ஒரு பிரிவினரான தொட்டிய நாயக்க மக்களிடையும் இந்த எண்ணம் நிலவி வந்தது. அறுப்புக்கோட்டையருகுள்ள கோசுகுண்டு என்ற சிற்றூரில் இன்றும் நாயக்கர்கள் மிகுதியாய் உள்ளனர். அந்நாளில் அங்கு வாழ்ந்த ஓர் இளைய தம்பதியர்க்கு இராமேஸ்வரம் செல்லும் ஆவல் மிகுந்தது.

கண்கவர் வனப்பும் மனம் நிறை குடும்பப் பாங்கும் கொண்ட இளம் பெண் அவள். வலிய தோள்களும், கட்டான உடலமைப்பும் கொண்டவன் அவன். விழியும் ஒளியும் போல், திருவும் எழிலும் போல் விளங்கிய அன்னுர் இருவரும் பயணம் கிளம்பினர்.

பட்டுக் கச்சை அரைக்கிசைத்து, சரிகை உத்தரீயம் மேலணிந்து, இடுப்பில் இடைவாள் சொருகி, அவன் முன் நடந்தான். எண்ணெய் விட்டு வாரிய கூந்தலை அள்ளி முடித்திருந்தான். நெற்றித் திலகமிட்டு, மார்புக்குக் கச்சிட்டு, எழிலான சேலை கட்டி, இடையில் வெற்றிலைப்பை சொருகி அவள் பின் நடந்தாள். அவள் தலையில் கட்டுச் சோறு மூட்டை வைத்திருந்தாள். உச்சிப் பொழுது என்பது கிழக்குச்சீமையில் நன்பகலைக் குறிக்கும் வழக்குச்சொல். உச்சிப் பொழுதில் இருவரும் திருச்சுழிக் கண்மாய்க்கரையில் தங்கி, கட்டுச்சோற்லைறப் புசித்தனர். வெய்யில் தாழும்வரை அக் கரையிலேயே களைப்பாறிவிட்டு, பின் பயணத்தைத் தொடர்ந்தனர். அந்திப் பொழுதில் நரிக்குடியை அடைந்தனர். களைப்பு மேலிட்டிருந்தது; பொழுதும் இருளத் தொடங்கிவிட்டது. நரிக்குடியில் மருதுபாண்டியர் கட்டிவைத்த அரண்மனை போன்ற சத்திரத்தின்

சிட்டுக்கிளி, தன்னைக் கேலிசெய்யும் தோழியுடன் ஆடும் காட்சி.

காவலாளி அவர்கள் இருக்க இடமும், உண்ண உணவும் கொடுத்தான். நடந்து வந்த களைப்பு வேறு; மருதரசர் உதவியால் கிடைத்த சோறை உண்ட மயக்கம் வேறு. அயர்ந்து தூங்கிவிட்டனர்.

அழகு கொழிக்கும் எழில் பாவையாய் ஊரில் நுழைந்த அவளின் பருவநலன், அங்கே திரிந்த சில காமக் கழுகுகளின் விழியைக் கொத்திவிட்டது போலும். வானம் முழுக் கறுமை பூத்தாற்போன்றே அக்காலிகளின் உள்ளமும் கறுமை பூத்துவிட்டது. அந்தத் தொட்டியப் பெண்ணைக் கவர நினைத்தனர். தடைக்கல்லாய் இருக்கும் அவள் கணவனைக் கொலை செய்துவிட்டனர்.

கணவன் மாண்டுவிட்டான்; காலிகள் சூழ முனைந்துவிட்டனர்; துணையற்ற தொட்டியப்பெண் அலறி அரற்றத் தொடங்கினுள். ஊரார் கூடினர்.

கையறு நிலையில், வாழ்க்கை யறுந்த சோகத்தில் வாடி வதங்கினுள் அவள். நடந்ததையறிந்த மக்கள் செய்வதறியாது திகைத்தனர். அலறித் துடித்த அவள், "மானங்காக்கும் மருதுபாண்டியன் ஆட்சியிலா இந்த அவலம்? அறம் வளர்க்கும் அவன் பிறந்த ஊரிலா இந்தக் கொடுமை?" என்று அரற்றினுள். "இந்த அநியாயத்திற்கு நீதி கேட்க உடன் மருதரசரை அழைத்து வருக!" என்ருள். மருதரசருக்கு ஆட்கள் சென்றனர். செய்தி கேட்டுத் துடித்த மருதரசர் சிந்தை நொந்தார்; குதிரையைத் தட்டிவிட்டார். சின்ன மருதுவும் காவலர்களும் புடைசூழ விரைந்த பெரியமருது அவலம் வழியத் தான் பிறந்த மண்ணை மிதித்தார்.

புனல் உகுக்கும் விழிகளும், துன்பம் கொட்டும் நெஞ்சுமாய் நின்ற அப்பெண், தன் சோகக் கதை கூறினுள். துடித்தெழுந்த மருதரசர் "குற்றவாளி யார்?" என்றறியத் துடித்தார். நாய் குற்றவாளியைப் பிடித்துத் தந்தது.

அழுது புலம்பிய அம்மங்கையை நோக்கி, "அம்மா! தெரியாது நடந்துவிட்ட இக்களங்கச் செயலுக்கு வெட்கித் தலை குனிகிறேன். எனையறியாமலே இது நடந்து விட்டது. எப்படியும் உன் கண்ணீரைத் துடைப்பது என் கடன். நீ இனிமேல் எனது மூத்த மகள்! பெற்ருல்தான் பிள்ளை என்பதில்லை! உனக்கு வேண்டிய வசதிகள் அத்துணையும் செய்து தருகிறேன்! பசுமை கொழிக்கும் வயல்களும், ஓங்கி உயந்த மாளிகையும் தருகிறேன். என் ஆட்சியில் நடந்த இத்தீச்செயலுக்கு என்னை மன்னித்திடுக, குலவிளக்கே!" என்று கெஞ்சிப் பார்த்தார். கணவனை இழந்த அவளுக்கு, அவையா தேவை? இழந்த வாழ்வு எழில் மாடத்தாலும் பொழில் சூழ் கழனிகளாலுமா மீளும்? மீளவே முடியாத ஓர் ஆசைச் சலனமாகி விட்டதே அவள் வாழ்வு!

அவள் மண்ணும் பொன்னும் வேண்டாமென்று மறுத்துவிட்டு, கணவனுடன் உடன்கட்டையேற ஏற்பாடுகள் செய்யச் சொன்னுள். அவள் விருப்பப்படி சந்தனக் கட்டைகளைச் சிதையில் அடுக்கினுர் மருது. குளித்து முழுகி, சிதையை வலம் வந்து உடன் கட்டை யேறினுள் அவள். ஆசைக் கனவுகளில் மிதந்த அந்த இளம் பொன்மேனிகள், வெந்தழிந்தன; பிடி சாம்பலாயின.

தான் பிறந்த மண்ணில், இறந்த மக்களை எண்ணிப் பெருமூச்செறிந்தார் அவர்.

★

மருதுபாண்டியர் ஆட்சியில் நீதி நிலை நிறுத்தப்பட்ட இக்காட்சியை "சிவகெங்கைச் சீமை" திரைப் படத்தில் காணலாம். இந்நிகழ்ச்சி நடந்த சத்திரம் இன்றும் நரிக்குடியில் உள்ளது. ஹவில்தார் சங்கரநாராயண (அய்யர்) என்பார் மேற்பார்த்து வருகிருர். இச்சத்திரத்தில் இப்போது இவ்வூர் அஞ்சல் நிலையமும் உள்ளது. மருதுபாண்டியர் வழி வந்த திரு. மருதுபாண்டி என்ற இளைஞர் இவ்வஞ்சல் நிலைய அலுவலராய்ப் பணியாற்றுகிருர். இதன் பின்புறத்தில் கிராம வானெலித் திடலும் ஊர்ப்பள்ளியும் மருதுபாண்டியர் சிலைகளும் உள்ளன.

அந்தத் தொட்டியப் பெண்ணுக்கு "ஏழு பேரோடு பிறந்த ஏழுவக்காள் நாச்சியாள்" என்ற நீண்ட பெயராம். அவளும் அவள் கணவனும் அணிந்திருந்த ஆடைகளும், காதோலை, கருமணி முதலியனவும் முத்துக்கருப்பன் (சேர்வை) அவர்கள் வீட்டில் இருக்கின்றன. அவ்வீட்டுத் தலைவியாக உள்ள அம்மையார் அப்பொருள்களை வைத்து, அவ்வப்போது பத்தினித் தெய்வ வழிபாடு நிகழ்த்துகிருர்கள்.

உள்ளத்தை அலைக்கழிக்கும் இந்த சோக வரலாற்றை அந்த அம்மையார்தான் சொன்னுர்கள்.

மரம் வளர்த்த பெரியவரும் அறம் வளர்த்த அரசரும்!

மருதரசர் தாம் செய்யும் எதையும் திறம்படச் செய்வதிலும் பெருமைபட முடிப்பதிலும் விருப்பமுள்ளவர். அவர் தம் ஆட்சியில், காளையார் கோவிலில் பெரிய தேர் ஒன்றைச் செய்ய முனைந்தார். இன்று மண்ணுள் புதையுண்டு கிடக்கும் அத்தேர் தன்னுள் ஒரு வரலாற்றையும் புதைத்துக்கொண்டு இருக்கிறது.

தேரின் சில பகுதிகளுக்குப் பெரிய அடிமரம் ஒன்று தேவைப்பட்டது. வேண்டிய அளவு உள்ள அடிமரம் திருப்புவனத்தில் உள்ளதாக ஏவலர் அறிந்தனர். அங்குள்ள பெரியதான அம்மருத மரத்தை வெட்டி வரப் பணித்தார், சேதியறிந்த மருதரசர். பணியாட்கள் மரத்தை வெட்ட முனைகையில் ஒரு பெரியவர் அதைத்



தடுத்தார். கோடரி கொண்டு மரத்தை வீழ்த்த முனைந்தோரைத் தடுத்ததேன், அப்பெரியவர்? உறுதியாக மறுத்தார், படை வீரர்கள் மருட்டியும்! 'அரசாங்கத்துப் பகையைத் தேடிக்கொள்ளாதீர்!' என்று அவர்கள் எச்சரித்தும் மறுத்துவிட்டார். மருதரசருக்குத் தாக்கல் தெரிவிக்கப்பட்டது...

வெண்புரவி ஊர்ந்து விரைந்து வந்தார், சின்னமருதுவுடன் பெரியமருது. மரம் வளர்த்த பெரியவர் அறம் வளர்த்த அரசர் அடி பணிந்தார். தனது விருப்பத்தை அந்தப் பெரியவர் மறுத்ததேன் என்று கேட்டார். பெரியவர் தனது உயிரினும் மேலாக, அந்த மருத மரத்தை வைத்திருப்பதன், வளர்த்திருப்பதன் காரணத்லதச் சொன்னுர்.

"அரசே! தங்கள்மேல் உள்ள அன்பால்தான் இந்த மரத்தை உயிரினும் மேலாய் வளர்க்கிறேன். தங்கள் பெயரும் மருது; இம்மரமும் மருது! மருதரசர் புகழ்போல்-அதை வணங்கும் என் உயிர்போல் வளர்ந்திருக்கும் இம்மரத்தை வெட்ட ஒத்திடுமோ என் உள்ளம்? அனுதினமும் நான் காத்துவரும் இம்மரம் வெட்டுண்டு போகலாமா, அரசே! சொல்லுங்கள்!" என்ருர் பெரியவர்.

முதியவர் தன்மீது வைத்துள்ள அன்பிற்கு விதந்து, அவர் அடிதொழப் போனுர் அரசர். உடனே பெரியவர் அவரைத் தாங்கி, தானும் மரமும் தப்பியமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

வன்மையும் வண்மையும் செறிந்த அன்னுர் ஆட்சி, மிகப் பல பெருமைகளை இவ்வண்ணம் கொண்டிருந்தது. பெரியவரும் சின்னவரும் விஞடிக்கு விஞடி மக்கள் நலமொன்றே குறிக்கோளாய்க் கொண்ட ஆண்ட வரலாறு சுவை மிக்கதாகும். அந்த வரலாற்றைப் படைக்கும் பெருமையைப் பெற்றதில் மகிழ்கின்றனர் கண்ணதாசன் புரடக்ஷன்சார்.

கல்லெழுத்தில் பல சொற்கள்

தமிழகத்தின் வரலாறு மிகத் தொன்மை வாய்ந்தது. தொன்மை வாய்ந்ததெனினும் முறையாகஎழுதப் படவில்லை. முறையாக எழுதப்படா ததால் ஏற்பட்ட இன்னல்கள் நனி யதிகம். தமிழ்மொழிக்குப் பெரும் விரையமென்று சொன்னலது மிகை யாகாது. தடையேதுமின்றித் தழைத்து வளர்ந்த தமிழ் மொழியின் வளர்ச்சிக் குறைவிற்கு இதுவுமொரு அடிப்படையாகும்.

வற்றுத வளஞ்சுரக்குஞ் சங்க நூற்களில் ஒரு சில பாடல்களும், இடைக்காலத்திற் தோன்றிய தென்னகக் கல்வெட்டுக்களும், பிற்காலத்தில் முளைத்த திருத்தொண்டர் புராணம் போன்ற சமயநூற்களும் இல்லையேல், தற்பொழுது காணப் படும் ஒரு சில வரலாற்றுண்மை களும் மறைந்து போயிருக்கும். கல்வெட்டுக்களில்லையேல், பெரிய புராணம் போன்ற நூல்களில் கூறப்படும் உண்மை வரலாறுகளை யும், பொய்யெனத் தள்ளி ஒதுக்கி யிருப்போம்.

மேலைநாட்டாரின் நுழைவால், 'தமிழ்மொழி பலவகையிலும் தாழ்ந்த தென்றலும், ஓரளவு வளர்ச்சியு மடைந்துள்ளது' என்பதைக் கண் கூடாகக் காணமுடியும். ஜர்மனி நாட்டில் தோன்றித் தமிழகத்திற் புகழடைந்த அறிஞர் உல்ஷ்துரை (Doctor Hultzch) அவர்கள் கல் வெட்டுக்களைப்பற்றி நினையாது விட் டிருந்தால், இன்று பல வரலாற்றுச் சான்றுகள் நமக்குத் தெரியாமலே மறைந்திருக்கும். எனவே, கல்வெட் டுத் துறையில் அவர் ஆற்றிய பணி யைத் தமிழ் மக்கள் என்றுமே மறவார். தான்மட்டும் அத்துறை யில் பணியாற்றியதோடல்லாமல் டி. ஏ. கோபிநாதராயர், வி. வெங் கையா என்பவர்களையும் அத்துறை யில் நன்ருகப் பழக்கிப் பணியாற்றும் படி பணித்துச் சென்றுர். அதனுல், தமிழக வேந்தர்களின் பெருமையும், பெருந்தலைவர்களது வரலாறும், இன் னேரன்ன அரிய செய்திகளும் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வாய்ப் பாயின.

'கல்வெட்டுக்களில் சில, பொய் கூறுவனவும் உண்டு' என்பதை முதன் முதல் கண்டு ஆராய்ந்து வெளிப்படுத்தியவர், கொங்கின் கோவை ஈன்ற பெரியார்; கணிதத் துறையிலே மிகவும் மேம்பட்டு விளங்கிய மூதறிஞர்; வானநூற்றுறை யில் மிகுந்த ஆராய்ச்சியுள்ளவர்; சிலம்பின் வரலாறு முழுக்க முழுக்க உண்மையென்பதைத்தேர்ந்தாய்ந்து வெளிப்படுத்திய தென்னகத்தின் மாமேதை பல்லடங்கூற்றத்து சோம னூர் தந்த **சாமிக்கண்ணு பிள்ளை** யென்பவர். அவர், இல்லையேல், கல் வெட்டுக்களின் உண்மை முழுதும் தெரியாமலே மறைந்திருக்கும். கல் வெட்டுக்கள் கூறும் வரலாறுகள் உண்மைதான் என்பதை நமக்குக் காட்டிய, சோமனூர் சான்றேரை மறக்கமுடியுமா ?

"கல் வெட்டுக்களில், வரலாறு களனைத்தும், தமிழ் மொழியிற் கூறப் பட்டுள்ளனவா ?" என்ற கேள்வி எழலாம். கல்வெட்டுக்களில் உள்ள மொழி தமிழல்ல. ஆரியமும்-தமிழும் கலந்த ஒரு மொழி. அதாவது கிரந்தத் தமிழ் என்பதாகும். ஆரியம், தமிழ் மொழியை அடிமைப்படுத்திய காலத்தில் கல்வெட்டுக்கள்எழுந்தன வாகையால் அம்மொழியே பெரிதும் பயின்று வந்துள்ளது என்பதைக் கல்வெட்டுப் படிப்பவர்கள் உணர முடியும். தமிழ்மொழிப் பயிற்சி ஒன்றுமட்டுமுடையவன், கல் வெட்டுக்களைப் படிக்கமுடியாது. அதற்குச் செத்த மொழியாம் ஆரியத் தின் துணை மிக மிக வேண்டப்படுவ தொன்றாகும்.

அவ்வாரிய மொழி மிகுந்துள்ள கல் வெட்டுக்களிலும், தூயதமிழ்ச் சொற் கள் பல பயின்று வந்துள்ளன. அச் சொற்கள் இன்று வழக்காறற்று கிடக்கின்றன. வழக்காறற்ற அச் சொற்கள் வழக்கிற்கு வந்தால், மொழியாட்சித் துறையில் சில தொல்லைகள் நீங்குமெனக் கருது கிறேன். அக்கருத்தின் பயனே, இக்கட்டுரையெழுதக் காரணமாகும். வழக்கிழந்த சொற்களை வழக்கிற்குக் கொண்டுவருதல் நம்போன்ருர்கடன் களில் தலையாயதாகும்.

"வெள்ளையர்கள் நம் நாட்டாட்சி யைக் கைப்பற்றுமுன், தமிழகத்தி லுள்ள அரசியல் பிரிவுகள் அனைத்தும் செம்மையாக அமைந்து - சிறப்புற ஆட்சி நடைபெற்று வந்திருக்கிறது" என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். வெள்ளையர்களுக்கு முன்னர், தென்னகத்திலிருந்த முஸ்லீம்களாலும் அரசியற் பிரிவுகள் மாற்றமடைந்திருக்கின்றன என் பதை வரலாறு கொண்டு தெளிய முடியும். ஆங்கிலேயர் தமிழ்நாட்டில் புகுந்த பிறகு, நம்நாட்டின் அரசியல் அமைப்பு-மொழி முதலியன முற்றிலும் மாற்றமடைந்தன. அரசியல் பிரிவு களுக்கு அன்றிருந்த பெயர்கள் நீக்கப்பட்டு வேற்றுமொழிப் பெயர் கள் இடப்பட்டன. ஏன் அப்படிச் செய்தார்கள் என்பது யாருக்கும் விளங்காத ஒன்று! மூவேந்தருக் குப்பின் வந்தோர், அவ்வவர் நலனுக் கேற்ப - அவ்வவர் மொழிக்கேற்ப - நாட்டின் பிரிவுகளை மாற்றி - பெயர் களை மாற்றித் தமிழ்மொழியைத் தாழ்த்தினர். தமிழ்நாட்டிலுள்ள கல் வெட்டுக்கள் தமிழ்மொழி ஒன் றிலேயே எழுதப்படாததற்கு இதுவு மொரு காரணம்.

மங்கலம் : பல சிற்றூர்கள் சேர்ந்த ஒரு பகுதியை, கிராமம் (Grammam) என்று இப்பொழுது கூறுகின்றனர். 'கிராமம்' என்பது வேற்றுமொழிச் சொல் என்பதை ஒலிக்கும் முறையாலே உணரலாம். எப்படியோ இச்சொல் தமிழ்நாட்டிற் புகுந்து வேரூன்றிவிட்டது. வேரூன் றியதனேதுவாக, "கோயமுத்தூர் ஜில்லா பல்லடம் தாலூகா சாமளா புரம் **கிராமம்** மஜரா கருகம்பாளை யத்திலிருக்கும்..." என்று எழுது மளவிற்கு தமிழ்மக்களின் மனம் மாற்றப்பட்டிருக்கிறது மாற்றப்பட்ட மனம் தெளிவடையச் சில கால மாகும். தெளிவடையச் செய்வது நம் போன்ரோர் கடமைகளில் தலை யாயதாகும்.

"'கிராமம்' என்ற சொல்லிற்கு அப்பொருளில் வழங்கிவரும் தமிழ்ச் சொல் உண்டா?" என்று சிலர் கடா விடுகின்றனர். தென்னகக் கல் வெட்டுக்களை-அரசியல் முறையைக் கல்லாதவர் கேட்குங் கேள்வி மேலே எழுந்த வினுவாகும். வரலாற்றை முறையாகப் பயின்றவரிங்ஙனங் கேளார்.

'மங்கலம்' என்ற சொல் பல சிற்றூர்களைக் குறிக்குமொரு சொல் லாகக் கல்வெட்டுக்களில் ஆளப் பட்டுள்ளது. தமிழக அரசியல் பிரிவு களிலும் அது ஒன்ருக அமைந் துள்ளது. 'கிராமம்' என்று தற் பொழுது வழங்குஞ் சொல்லுக்குப் பதிலாக, 'மங்கலம்' என்ற சொல்லை முன்னையோர் இட்டு வழங்கியுள்ள னர். 'மங்கலம்' என்பது தூயதமிழ்ச் சொல்லுமாகும் ஆனல், இன்று வழக் கொழிந்து வாழாது கிடக்கின்றது. '......ஸ்ரீ விக்கிரமாபரண சதுர்வேதி **மங்கலத்தின்**....'என்று கல்வெட்டு இதை விளக்குகிறது. S. I. I. Vol. III, Part I, No 4 என்ற பகுதியை முழுதும் படித்தால் தெற் றென விளங்கும்.

கூற்றம் : பல கிராமங்கள்சேர்ந்த வொரு பகுதியை 'தாலுகா' என வழங்குகின்றனர். இது அடிபட்ட சொல்லாகிவிட்டது. 'தாலுகா' என்பது தமிழ்ச்சொல் அல்லவென் பதை ஒவ்வொருவரும் உணர்வர். உணர்ந்தும் அச்சொல்லையே பயன் படுத்துகின்றனர். தமிழார்வமுள்ள ஒரு சிலர் 'தாலுகா'வெனச் சொல் லக்கூடாது அதற்குப் பதிலாக நல்ல தமிழ்ச் சொல்லால் கூறவேண்டும். என்று விழைவுற்று, 'வட்டம்' என்று தமிழாகக் கூறுகின்றனர். இது பொருந்தாதென்பது என்னுடைய கருத்து.

தேர்தற் காலங்களில் நாட்டைப் பகுதி பகுதியாகப் பிரிக்கின்றுர்கள். அப்பகுதியைத் 'தொகுதி' என்று குறிக்கின்றனர். தொகுதிக்குப் பதி லாக வட்டமென்றுங் கூறுகின்றனர். எனவே, தொகுதியைக் குறிக்கும் வட்டமும், தாலுகாவைக் குறிக்கும் வட்டமும், ஒன்ரு? அல்லது வேரு? என்பது மக்களுக்கு ஐயத்தை உண் டாக்கும். ஆகவே, 'தாலுகா' என் பதற்கு 'வட்டம்' என்பது பொருந் தாது.

நகர்ப்புறங்களிலே நடைபெறும், நகரசபைத் தேர்தல்களுக்காக, நகரைப் பல பகுதிகளாகப் பிரித்து அதற்கு வார்டு (Ward) என ஆங்கிலப்பெயரைச் சூட்டியுள்ளனர். 'வார்டு' என்பதற்குத் தமிழ்ப் பெயராக, '**வட்டம்**' என்ற சொல்லை வழங்குகின்றனர். 'வட்டம்' என்று ஒருவன் சொன்னவுடனே, அது, பொதுத் தேர்தற்றெகுதியைக் குறிக்குமா? அல்லது, வார்டு' என் பதைக் காட்டுமா? அல்லது 'தாலுகா' என்பதைச் சுட்டுமா? என்ற பல ஐயங்கள் கிளம்பும். எனவேதான் 'தாலுகா' என்பதற்கு 'வட்டம்' என்பது பொருந்தும் சொல் லல்ல - ஒத்தமொழியல்லவெனக் கூறுகிறேன்.

"'தாலுகா' என்பதற்கு ஏற்ற தமிழ்ச்சொல்தான் என்ன?" என்ற வினுவெழலாம். அதற்காகத்தான் நாம் கல்வெட்டை நாடவேண்டும்.

'...நித்த வினேத வளநாட்டு ஆவூர்க் **கூற்றத்து** ஆவூருடையான் கண்ணனுரூரன் ...'என்று கல் லெழுத்துச் சொல்லுகிறது (S. I. I. Vol. III, Part I, No. 4). இன்னும், 'நாடு' என்பதும், கூற்றத்திற்குப் பதிலாக வழங்கி வந்திருக்கிறது என் பதையு முணரலாம். "தாலுகா" வென்பதற்கு நேரான தமிழ்மொழி, 'கூற்றம்' என்பதாகும்.

கோட்டம் : பல தாலூக்காக் கள் சேர்ந்த ஒரு பகுதியை 'ஜில்லா' அல்லது District என வழங்குகின்ற னர். இதைக் குறிக்க முற் காலத்தில் இப்பெயர்களைத்தான் வழங்கினரா? என்பதை எண்ணிப் பார்க்க வேண் டும். 'ஜில்லா' என்பதும் District என்பதும் வேற்றுமொழிச் சொற்கள். அதற்கு நேரான தமிழ்ச் சொல் வேண்டுமென்று சிலர் கருதினர். கருதியதின் பயனுக '**மாவட்டம்**' என்பது கிடைத்தது. "தாலூகா" என்பது வட்டமானல் ஜில்லாவென் பது மாவட்டமாகும். அதற்கெதிர் மறையாகவிருந்தால், இதுவும் பொருந்தாத சொல்லேயாகும். 'மாவட்டம்' என்ருல் 'பெரியவட்டம்' என்று பொருள். அங்ஙனமெனில், தமிழ்நாடே ஒரு பெரிய வட்டந் தானே? மற்ற நாடுகளும் ஒரு பெரிய வட்டந்தானே? ஏன்? உல கமே ஒரு பெரிய வட்டந்தானே? எனவே, 'ஜில்லா' வென்பதற்கு, மாவட்டம் என்பது எங்ஙனம் பொருந்தமுடியும்? சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்றினுக்குப் பெயரிடுவதென்ருல், அது ஒருபுடை யாவது ஒத்திருக்க வேண்டாமா? ஒரு சிறிது மொவ்வாத பெயரைக் கூறலாமா? வேண்டாமா? என் பதைச் சிறிதேனுஞ் சிந்தித்திருந் தால், இப்பெயரால் அழைக்கக் கூசியிருப்போம். பண்டைத் தமிழ்நாட்டு அரசியல், இப்பகுதியை அழகான-பொருத்தமான பெயரால் குறிப்பிட்டு வழங்கி வந்துள்ளது.

'......ஐயங் கொண்ட சோழ மண்டலததுக் காலியூர் கோட் டத்து..." என்பதை (S. I. I. Vol. III, Part I, No. 4) இக்கல் வெட்டுக் கூறுகிறது. இதில் 'கோட் டம்' என்பது, 'கொட்டம்' எனத் தவருக எழுதப்பட்டுள்ளது. இச் சொற்களை உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறேன். ஏற்றன கொண்டு, இயல்புடன் தமிழை வளர்த்திடுக.

-க. சி. இராசியண்ணன்

திருமண அழைப்பு

பேரன்புடையீர் !

நாளது 3—5—'59 காலை 11 மணியளவில், மதுரை ஷெனுய்நகர், நகரவை உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தில், எனது மகன் வே. சௌந்தரராசன் பி. ஏ., (பி. எல்), மணப்பாரை, செல்வி வசுந்திராபாயை ஏற்கும மணவிழா விற்குத் தாங்கள அனைவரும் தவருது வருகை தர வேண்டு கிறேன்.

நாவலர் உயர்திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையேற்று மணமக்களை வாழ்த்துவார்கள்.

"பனகல் இல்லம்"
2, மதிச்சியம்,
மதுரை.
25-4-'59.

அன்புள்ள,
ஏ. வேணுகோபால்.

அரிஸ்டாட்டிலின் கருத்துக்கள்

அரிஸ்டாட்டில் கி. மு. 385-ம் ஆண்டு மாசிடோனியாவில் உள்ள ஸ்டஜிரா என்ற இடத்தில் ஒரு வைத்தியருக்கு மகனாகப் பிறந்தார். தனது 17-வது வயதில் அவர் கல்வியின்மீது மிகுந்த ஆர்வம்கொண்டு கிரேக்கத்தின் சிறந்த நகரமான ஏதென்ஸில் உள்ள பிளேட்டோவின் கல்விக்கூடத்தில் அவரது மாணவனாகச் சேர்ந்தார். இருபது ஆண்டுகள் பிளேட்டோவினுடன் இருந்த பிறகு கி. மு. 348-ம் ஆண்டு அதாவது பிளேட்டோ இறந்த பிறகு அரிஸ்டாட்டில் கல்விக்கூடத்தை விட்டு விலகினார். கிரேக்கத்தின் கீர்த்தியையும் அறிவு ஒளியையும் கண்ட மாசிடோனியா மன்னன் பிலிப் தனது மகன் அலெக்ஸாண்டருக்கு கல்வி கற்பிக்க ஒரு கிரேக்க அறிஞனை தேடிக்கொண்டிருந்தான். அரிஸ்டாட்டிலின் தத்துவ விளக்கங்களையும் அறிவுரைகளையும் ஆராய்ச்சி மிக்க சொற்பொழிவுகளையும் பற்றிக் கேள்விப்பட்ட அவன் தனது மகனுக்கு ஆசிரியனாக அரிஸ்டாட்டிலை அமர்த்தினான். உலகத்தின் பெரும்பகுதியை தன் குடையின்கீழ்க் கொண்டுவந்த மாவீரன் அலெக்ஸாண்டர் கற்றோரையும் அறிஞர்களையும் மதித்து அவர்களுக்கு, சகலவித வசதிகளையும் செய்துகொடுத்தான். தான் அரியணை ஏறிய பிறகு, சிறந்த ஆட்சிமுறையை ஏற்படுத்தினான். அதற்கு அரிஸ்டாட்டிலின் அற்புத அரசியல் கருத்துக்கள் அவனுக்குத் துணைபுரிந்தன.

அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் மாணவராக இருந்தாலும் பிளேட்டோவின் கம்யூனிஸக் கொள்கைகளைப் பலமாகக் கண்டிக்கிறார். பிளேட்டோ, சட்டம் ஒரு நாட்டிற்கு தேவையில்லை என்றார். ஏனென்றால் அறிவு மிகுந்த ஒருவன் நாட்டை ஆளும் பொழுது அவனுக்கு 'நன்மை எது? தீமை எது?'' என்பன நன்றாகத் தெரியும். எனவே சட்டத்தின் துணை தேவையில்லை என்றார் பிளேட்டோ. ஆனால் அரிஸ்டாட்டில் சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திக் கூறுகிறார். பிளேட்டோ அரசியலில் பங்கு கொள்வதில் மட்டுமல்லாமல் எல்லா துறைகளிலும் ஆணும் பெண்ணும் சமம் என்று கூறுகிறார். ஆனால் அரிஸ்டாட்டில் "இயற்கை என்னும் அன்னை பெண்ணுக்கு ஒரு மாற்றாந் தாய் போன்றவள். பெண்களின் இயற்கை அமைப்பு அவர்கள் ஆண்களுடன் சமமாக நிற்பதற்குத் தடை செய்கிறது எனவே அவர்கள் எந்த விதத்திலும் ஆண்களுக்கு ஒப்பானவர்கள் அல்ல'' என்கிறார். அவர் அரசாட்சியை இரண்டு விதமாகப் பிரிக்கிறார்.

1 சட்டத்திற்குட்பட்ட நேர்மையான ஆட்சி.

2. சட்ட முறைகள் இல்லாத யதேச்சதிகார ஆட்சி.

சட்டத்திற்குட்பட்ட ஆட்சி:

ஒழுங்கான சட்ட திட்டங்களுக்குட்பட்ட ஆட்சிமுறை மக்களின் நலன் கருதி அவர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. மக்களுக்காக மக்களினால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் இதனுள் அடங்கும். பெரும்பான்மை மக்களின் நலனே முக்கிய நோக்கம். மக்களின்மேல் உள்ள அன்பினால் அவர்களுக்கு நன்மை செய்யப்படுவதற்காக ஏற்பட்ட அரசாங்கத்தை, சட்டதிட்டங்களுக்குட்பட்ட அரசாங்கம் அல்லது மக்கள் நலனைப் பேணுகின்ற அரசாங்கம் என அரிஸ்டாட்டில் அழைக்கின்றார்.

சட்ட முறைகள் இல்லாத ஆட்சி:

சட்ட வரம்பிற்கு உட்படாத ஆட்சியை யதேச்சாதிகார ஆட்சி என்கிறார் அரிஸ்டாட்டில். யதேச்சதிகார ஆட்சிமுறை மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் எழுந்தது அல்ல. தனி மனிதனின் ஆசைக்கும் உணர்ச்சிகளுக்கும் சமுதாயமே கட்டுப்பட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளின் அடிப்படையில்தான் ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த கொள்கைகளின் பேரில்தான் யதேச்சதிகாரமும் மக்களாட்சி அமைப்பு முறையும் பிரிக்கப்படுகின்றன என்கிறார் அரிஸ்டாட்டில். தனி மனிதன் தன்னுடைய அறிவு முதிர்ச்சியின் பயனாகத் தனது ஒப்பற்ற திறமையின் பயனாகத் தீட்டப்படுகின்ற சட்டத்தைவிட சாதாரண மனிதர்கள் பல பேர் சேர்ந்து வகுக்கின்ற சட்ட திட்டம் சிறந்து விளங்குகின்றது என்கிறார். ஒருவன் எவ்வளவு திறமையுள்ளவனாக, அறிவு உள்ளவனாக, ஆற்றல் மிக்கவனாக இருந்தாலும் அவன் உண்டாக்குகின்ற சட்டம் சமுதாயத்திற்கு நன்மை பயப்பனவாக இருக்காது. ஆனால் சாதாரண அறிவு பெற்றவர்கள் பல பேர் தங்களுக்குள் விவாதித்து ஒரு சட்டத்தை இயற்றினால் அது சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியதாக இருக்கும். எனவே சட்டங்களை வகுப்பதற்குப் பல மனிதர்களின் கூட்டமைப்பு உள்ள ஒரு மன்றம் தேவை என்கிறார் அவர். மனிதனுடைய ஒழுக்க நிலையை வளர்ப்பது அரசாங்கத்தின் குறிக் கோளாக இருக்க வேண்டும் என்கிறார். ஏனென்றால் ஒரு நாடு நல்ல நாடு என்று போற்றப்படுவதற்குத் தனி மனிதனின் குணமே எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே நாட்டு மக்களிடையே ஒரு மேலான ஒழுக்க நிலையை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் அரிஸ்டாட்டில். தனி மனிதர் சொத்துரிமையை, பிளேட்டோ எதிர்க்கிறார்; அரிஸ்டாட்டில் ஆதரிக்கிறார். ஒவ்வொரு மனிதனும் தனக்கென நிலம் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பொதுமக்களின் நன்மைக்காக உபயோகிக்கப்பட வேண்டும். எனவே நிலம் உள்ளவன் அதன் பலனைத் தானே அனுபவிக்க உரிமை இல்லை. மக்களின் நன்மைக்காக அவை உபயோகிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் என்பது அந்த நாட்டு மக்களின் சமுதாய அமைப்பு முறையின் பிரதிபலிப்பு என்கிறார் அரிஸ்டாட்டில். ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் அந்தந்த நாட்டு மக்களின் கலைப்பண்பு, சமுதாய வாழ்க்கை, குண நலன்கள் முதலியவற்றிற்குத் தகுந்தவாறு அமையும் என்பது அவர் முடிவு.

எந்த ஒரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த நாட்டில் இரு பெரும் சக்திகள் கிழக்கும் மேற்குமாகத் தாங்களே ஆட்சிபீடத்தில் அமரவேண்டும் என்று போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு சக்தி சொத்துரிமையின் அடிப்படையில் எழுந்தது; அதாவது பணபலம் உள்ளோர்; ஆனால் எண்ணிக்கையில் குறைந்தோர் இதற்கு எதிர்ப்புச் சக்தி 'இல்லாமை' என்ற அடிப்படையில் எழுப்பப்பட்டது; அதாவது ஏழை எளியவர்கள்; ஆனால் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். இந்த இரு சாரரும் போட்டியிடுகிறார்கள் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக. சொத்துரிமையும் மிகுந்த செல்வாக்கும் உள்ளவர்கள் பதவிக்கு வரவேண்டுமா? அல்லது பணபலம் இல்லாத எண்ணிக்கையில் அதிகமுள்ள ஏழைமக்கள் பதவிக்கு வர வேண்டுமா என்ற கேள்விக்கு அரிஸ்டாட்டில் அருமையான முறையில் பதில் தருகிறார்.

''பணம் படைத்தவர்களாலே ஆளப்படுகின்ற அரசாங்கம் மக்களுக்கு பெருமளவு நன்மை தராது. அதைப் போல் எண்ணிக்கையில் அதிகமுள்ளோர் ஆன எளியவர்களால் நடத்தப்படுகின்ற அரசாங்கமும் மக்களுக்கு நன்மை தராது. நல்லதொரு அரசாங்கம் இந்த இரண்டு சாரராலும் நடத்தப்பட வேண்டும்'' என்கிறார், அரிஸ்டாட்டில். பணம் படைத்த செல்வர்கள் படிப்பதற்கு வாய்ப்பும் வசதியும் படைத்தவர்கள். எனவே அவர்களில் படித்தோர் அதிகமாக இருப்பர். ஆனால் ஏழைமக்களிடம் படித்துப் பட்டம் பெற்றவனை நாம் காணமுடியாது. ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் அதிகமிருப்பதால் பெரும்பான்மை மக்களின் நலனைப் பேணுவர். அவர்களை எளிதில் லஞ்சம் முதலிய ஊழல்களுக்கு உட்படுத்த முடியாது எனவே நல்லதொரு அரசாங்கம் அமைப்பதற்கு இரு சாரரும் தேவைப்படுகின்றனர். ஒரு நாடு இந்த இரு சாரரிடமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்த அரசாங்கத்தைச் சிறந்த அரசாங்கம் என்று அழைக்கமுடியும் என்பது அரிஸ்ட்டாட்டில் கருத்து.

கிரேக்க சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பிறகு எழுந்த பல சாம்ராஜ்யங்கள் கிரேக்க தத்துவ ஞானிகளான சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகிய மூவரின் அரசியற் கருத்துக்களின் அடிப்படையில்தான் தங்கள் தங்கள் ஆட்சி அமைப்பு முறையை ஏற்படுத்திக்கொண்டன. தற்கால அரசியல் அமைப்புக்கள் பலவற்றிற்கு அரிஸ்ட்டாட்டிலின் அரசியல் விளக்கமே மூலகாரணமாயிற்று. பிற்காலத்தில் எழுந்த அரசியல் ஞானிகளான தாமஸ் அக்குயினஸ். மார்சிலியோ மாக்கியவல்லி, டாண்டே, போடான், ஹாப்ஸ், லாக், ரூசோ போன்றவர்கள் அரிஸ்டாட்டிலின் நூல்களைப் படித்து. அந்த அடிப்படையில்தான் தங்கள் அரசியல் கருத்துக்களை வெளியிட்டனர். அரசியல் ஞானிகளின் தந்தையாக விளங்கிய அரிஸ்டாட்டிலை "எல்லாம் அறிந்தவர்களின் தலைவன்'' என அரசியல் தலைவர்கள் போற்றுகின்றனர். 'அரசியல்' (Politics) என்ற புத்தகத்தின் மூலம் தனது அரும்பெரும் கருத்துக்களை உலகிற்கு அளித்து உலக அரசியல் தலைவருக்கு வழிகாட்டியாக கலங்கரை விளக்காக இன்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கிறார் அரிஸ்டாட்டில்.

கடந்த இதழில் எழுதியபடியும் இக்கட்டுரைப்படியும், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோர் சிந்தனைகள் விளக்கப்பட்டன. அவற்றில் உள்ளவை எல்லாம் அவர்கள் கருத்துக்களே. மொத்தத்தில் அவை மனிதச் சிந்தனைக்குச் சத்தான உணவுகள் ஆகும்.

-ஜோசப் பெஸ்கி, பி. ஏ.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல் ரோடு, மதுரை

செந்தில்வேலன் ஜிந்தாபாத்! செங்கொடி முர்தாபாத்!

“திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கு மார்க்சிசம் தெரியுமா? பொருள் முதல் வாதம் புரியுமா? கேப்பிட்டலிசத்தைப் படித்திருக்கிறார்களா? மார்க்சும், ஏங்கல்ஸ்சும், லெனினும் எழுதிவைத்த தத்துவங்கள் எங்களுக்குத் தான் தெரியும். அதை கரைத்துக் குடித்தவர்களும் நாங்கள் தான்” என்று மேடை அதிரப் பேசிடும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களின் குட்டித் தலைவர் திரு. வி. மதனகோபால் திண்டுக்கல் அருகில் உள்ள எரியோட்டில் (26-3-’59) சுப்பிரமணிய சாமிக்குச் செங்கொடித் தோரணங்களால் அலங்கரித்துத் திருவிழா நடத்தினர். மதனகோபால் வேடசந்தூர்த் தொகுதியின் பழைய கம்யூனிஸ்ட் எம். எல். ஏ. ஆவார். இந்தத் தடவை சௌந்தரத்தம்மையாரோடு போட்டி போட்டுத் தோற்றுவிட்டார். அடுத்த தடவையும் தோல்வி வரக்கூடாது என்றோ, யாதோ அவர் சுப்பிரமணிய துதியில் இறங்கிவிட்டார். சுத்தியலும் அரிவாளும் ஏந்திடும் அவர், சுபபிரமணியர் தாளேந்தியதேனோ? மார்க்சிசக் கண்ணோட்டக்காரர்களின் உண்மை நிலையை ஊர் மக்களிடம் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டார்.

இனிப் பூட்டிக்கிடக்கும் கோவில்களுக்கு (பூஜை செய்ய) பூஜாரி வேலை செய்யக் கம்யூனிஸ்ட்கள் முனைந்து விடுவார்கள். “செந்தில் வேலனுக்கு ஜிந்தாபாத்!” எனக் கோஷம் போடக் கொடி தூக்கும் குப்பன்களும் சுப்பன்களும் அண்டர் கிரவுண்டில் ஆறு மாதம் இருந்தவர்களும் ஆரம்பித்து விடுவார்கள்! இதை எரியோடு நிகழ்ச்சி எடுத்துக் காட்டி விட்டது.

“பாட்டாளிகளே! பஞ்சைகளே! ஆலை அரசர்களின் அன்பை—ஆதரவைப் பெற ஆலயங்கள் தோறும் ஆறுகால பூஜை செய்யுங்கள்; இல்லாமைத் தேளால் கொட்டப்பட்டு இறக்கும் தருவாயில் இருக்கிறீர்களா? அப்படியானால் இறைவனை இடைவிடாது தொழுங்கள்! இல்லாமை இருள் அகலும்; இன்பம் பெருகும்; துன்பம் விலகும்!”—இப்படியும் கம்யூனிஸ்ட்கள் பேசினால் இனி ஆச்சரியமில்லை.

“ஏழை எளிய மக்களின் வறுமையைப் போக்க வர்க்கப் போராட்டம் தொடங்கப் போகிறோம், கம்யூனிஸ்ட் கட்சிக்கு சந்தாக் கொடுங்கள் தோழர்களே!” என்று பேசிடும் சமதர்மவாதிகள் புராணப் புளுகர்களுக்குத்தரகர்களாய்மாறிக் கம்பராமாயணத்தில் பரத்வாச முனிவர் பரதன் படைகளுக்கு விருந்து வைத்த படலத்தில் பொதுவுடைமை இருக்கிறது என்று கூசாமல் கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தத்துவம் இருக்கிறதா என்று கேட்பதில் என்ன பொருள் உண்டு?

“பாரெங்கனும் பசிப்பிணி போக்க மார்க்ஸ் ஈந்த சமதர்மக் கொள்கைகளை நாட்டு மக்களிடம் பரப்ப நாங்கள்தான் இந்த நாட்டில் அவதாரம் எடுத்திருக்கிறோம் அவனியோரே! எங்கள் அணியில் சேர்ந்திடுவீர்” என்று சந்து முனைகளில் சிந்துபாடி மார்க்சிச மாத்திரை விற்கும் தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட்களே! அவர்களின் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்களே, இதோ ஒரு டோஸ்.

“அப்பாவி மக்களிடம் ஆண்டவனின் அவதார மகிமைகளைக் கூறி வயிறு வளர்ப்பவர்கள், **தொன்மை காலத்து முதலாளி வர்க்கம்** (Primitive Capitalists)” என்றான் **மார்க்ஸ்**. இந்தக் கசப்பு மருந்தையும் அருந்துங்கள்.

“அழிவு ஆக்கங்களின் மானிட ஜாதியின் சரித்திரம் என்பது இருக்கப்பட்ட சூழ்நிலையை அனுசரித்து தனது தேவைகளை முன்னிட்டு மனிதன் தனது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டிருக்கிறானே தவிர ஏதோ அவனுக்குப் புறம்பான, அல்லது அவனை மீறின ஒரு சக்தியின் துணை பெற்று அவன் வளர்ச்சியடைவதில்லை” (டயலெக்டிகல் மெடீரியலிஸம்) இத்தத்துவத்தை மறந்து மார்க்சிசத்தை பூஜா மடத்திலே வைத்துப் பூஜிக்கும் “காம்ரேடுக”ளின் நிலைகண்டு பரிதாபப் படுகிறேன்.

சுயசிந்தனை இழந்து மாஸ்கோவின் சட்டலைக்குக் காத்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்களின் அறிவில் தெளிவு உண்டாக மீண்டும். ஒரு முறை காரல் மார்க்சின் சித்தாந்தங்களைப் படித்துணர வேண்டுகிறேன். இதை அவர்கள் உடனடிப் பிரச்னையாக்கிக்கொண்டால் கொள்கைச் சோரம் போக மாட்டார்கள்.

தன்னைத் தவிர மற்றவர்கள் மார்ச்சின் கொள்கைகளைப் படித்திருக்கவே முடியாது என்று மேதாவித்தனமாய் பேசிடும் பி. ஆர்., எம். ஆர். வி., பிற ஜால்ராக்களும், மாஜினிக்களும் கடந்த கால வரலாற்றை திரும்பிப்பார்த்து, ஆத்திரத்திற்கு இடம் கொடுக்காமல் அறிவுக்கு வேலை கொடுத்து மார்க்சிசப் புத்தகத்தின் மீது படிந்துள்ள மத மாசுகளைத் துடைத்து அரசியலில் நாணயமாக நடந்துகொண்டு நலிந்தோரைத் தேற்றப் புறப்பட்டால் நல்லது. அதை விடுத்து மத ஏடுகளுடன் மார்க்சிச கருத்தை இணைத்து, பொதுவுடமையர்போல் வேடம் புனைவதினால் ‘அழிவு’ப் பெண்ணை அவர்கள் அணைத்துக்கொள்ள வேண்டிய நிலை உண்டாகும்.

லெனின் தொழிலாளர் கட்சிக்கு மார்க்சிசத் தத்துவம் தீர்மானமான முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை வலியுறுத்துகிறார்; “புரட்சி தத்துவமில்லாமல் புரட்சி இயக்கமில்லை” என்று கூறுகிறார், “ருஷ்ய சோஷல் டெமாக்ரட்டுகள் முன்னுள்ள வேலைகள்” என்ற பிரசுரத்தில்.

உழைக்கும் வர்க்கம் உய்ய, புரட்சி எண்ணங்கள் உருவாக வேண்டும் என்று லெனின் திட்டவட்டமாகக் கூறுகிறார் ஆனால் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் பாட்டாளிகளின் வறுமை நீங்க முருகனிடம் வரம் கேட்கிறார்கள். அந்தோ பரிதாபம்!

ஸ்டாலின் லெனினின் வேலைத் திட்டங்களைப்பற்றிக் கூறியதைக் கேளுங்கள்:—

“லெனின் புதிய கோட்பாடுகள்” எதையும் மார்க்சிசத்துடன் சேர்த்தார் என்றோ, மார்க்சிசத்தின் ‘பழைய’ கோட்பாடுகளனைத்தையும் அதனின்று அகற்றினாரென்றோ நான் கருதவில்லை. மார்க்ஸ், எங்கல்ஸ் இவர்களிருவரையும் விசுவாசத்துடன் தடம் வழுவாமல் பின்பற்றும் ஈடிணையற்ற சிஷ்யர் அன்றும் இன்றும் லெனின் தான். லெனின், மார்க்சிசத்தின் கோட்பாடுகள் யாவற்றையும் பூரணமாக அடிப்படையாகக் கொண்டிருந்தார். ஆனால் அவர் மார்க்சின் கோட்பாடுகளை மேலும் வளர்த்துச் சென்றார்”.

[ஆதாரம் ‘ஜனயுகம்’ 1950]

கம்யூனிஸ்ட்கள் உழைக்கும் வர்க்கத்திடம் மார்க்சிசக் கருத்துக்களை கூறாமல் கம்ப ராமாயணக் கதை கூறி வர்க்கப் (புரட்சி) போராட்டம் நடத்தப் போகிறோம் என்றால் பிரச்னை தீர்ந்துவிடுமா? **கர்மவினை, கடவுள் செயல் என்ற எண்ணங்களை இதயத்தில் மோதவிட்டுக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கம் புரட்சி திட்டங்களை ஏற்றுக் கொள்ளுமா?** ஆகவே அவர்களின் மௌடீக எண்ணத்தை முதலில் நீக்க வேண்டும். அந்தப் பணியைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் செய்கிறது. இதைக் கண்டு காயும் காம்ரேடுகள் அழிவுப் பாதையில் தி. மு. க. என்று ஏடு நிறைய எழுதுவதில் முனைகிறார்கள்.

ஊரை ஏய்க்க ஒரு கொள்கை, உழைப்பவர்களை மயக்க ஒரு கொள்கை என வைத்திருக்கும் மாஸ்கோ தாசர்கள் சமுதாயத்தில் புரையோடிப் போய் நாற்றமடிக்கும் புராணப் புளுகுகளை அழிக்க முன்வரட்டும். “புரட்சி! புரட்சி!” என்று கூவிப் பயனில்லை புதுமை எண்ணத்தை தொழிலாளர்களிடம் புகுத்திப் பொதுவுடமைப் போலித்தனத்திற்குச் சீட்டு கொடுக்கட்டும்.

உழைக்கும் வர்க்கம் உன்னதநிலை அடைய, பகுத்தறிவுப் பாதையே சிறந்தது. அது மாஸ்கோப் பாதையைவிட மகத்துவம் நிறைந்தது. அல்லாது எரியோடு போன்று அறுபடை வீட்டானுக்குக் கொடி பிடிப்பது, கொண்ட கொள்கையை மறக்கும் மடமையாகும்!

—வேடசந்தூர் வி. நாகசுந்தரம்.

புதுவையில்

தி. மு. க. சிறப்பு மாநாடு

மே 2, 3- (சனி, ஞாயிறு) நாட்களில்
புதுவை ‘ரோடியர்’ திடலில் நடைபெறும்.

★

தலைவர் :
எம். பி. சுப்பிரமணியம்
பி. ஏ., பி. எல், எம். எல். ஏ.

திறப்பாளர் :
பி. ஆர். கோகுலகிருட்டிணன்
பி. ஏ., பி. எல்.

அறிஞர் ★ நாவலர்
அண்ணா, இரா. நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள், கலைஞர்கள் கலந்துகொள்வர்.

நாகூர் அனீபா இசை நிகழ்ச்சியும்
கலைஞர் **மு. கருணாநிதி** எம். எல். ஏ. நடிக்கும்

‘உதயசூரியன்’

நாடகமும் நடைபெறும்.

★ ★

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

திண்ணையில் அமர்ந்து வெற்றிலை போட ஆரம்பித்தான் அபிநயசுந்தரம். பெண்ணைப் பிடித்துவிட்டது என்றும், மற்ற விஷயங்களைத் தன் சிற்றப்பா பேசிக்கொள்வார் என்றும், தான் இரவு வண்டிக்கே போவதாகவும் சொன்னான். செண்பகநாதரும் ஒரு வழியாகச் சம்மதித்தார். “திருச்சியில் எந்தக் காலேஜில் படித்தீர்கள்” என்று அபிநயத்தை வினவினார். காலேஜ் என்றதும் அபிநயத்துக்கு ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டது. உடனே, “திருச்சியில் தானே! நெறைய காலேஜ்கள் இருக்கின்றன” என்றான். தான் கேட்ட கேள்விக்குத் தகுந்த பதில் கிடைக்காததால் ஒன்றும் புரியாமல் திண்டாடினார் செண்பகநாதர். மறுபடியும், “தாங்கள் எந்த வருஷத்தில் பி. ஏ. பாஸ் செய்தீர்கள்?” என்று கேட்டார். அவ்வளவுதான் அபிநயத்துக்கு விஷயம்புரிந்துவிட்டது. தன் பெயரின் இறுதியில் பி. ஏ. என்று ‘இனிசியலை’ப் போட்டிருப்பதை, செண்பகநாதர் பி. ஏ. பட்டம் பெற்றதாக எண்ணிக்கொண்டுவிட்டார் என்பது அப்போதுதான் விளங்கியது அவனுக்கு. ‘ஆகா தவறு நடந்துவிட்டதே’ என்று எண்ணியபடி, செண்பகநாதரிடம் ‘பி. ஏ.’ என்பது தான் பெற்ற பட்டம் அல்லவென்றும், தனது தாத்தாவின் பெயரையும் தந்தையின் பெயரையும் குறிக்கும் முதல் எழுத்துக்கள் என்றும், தான் ஐந்தாவதுதான் பாஸ்செய்துள்ளதாகவும் சொன்னான். அவ்வளவுதான் செண்பகநாதர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டான். செண்பகநாதருக்கு, ஒருவேளை ‘அநித்யம்’ நேர்ந்துவிட்டால், அந்தக் குற்றம் தன்னைச் சேர்ந்ததாகிவிடுமோ என்று எண்ணி அப்படியே நழுவிவிட்டான் அபிநயம். பாவம், செல்லத்தம்மாள் கோதுமை அல்வாவும் கோயம்புத்தூர் போண்டாவும் தயார் செய்தும்கூட ‘முடிவு பழைய முடிவுதான்.’

★

வினா - விடை

கடலரசன் பதிலளிக்கிறார்

ஙா. எழிலரசு, கோவை.

அறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் நிதியமைச்சரை ஆதரித்துவிட்டு, வெளியே வந்து எதிர்க்கும்படி சொல்கிறார் என்று கம்யூனிஸ்ட்கள் கூறித் திரிவதற்குத் தங்கள் பதில் என்ன?

அறிஞர் அண்ணா அவர்கள் நிதியமைச்சரின் அறிக்கை தயாரிக்கும் திறமையைப் பாராட்டினார். திறமை எங்கிருந்தாலும் பாராட்டுவதுதான் அறிவுடையோர்க்கழகு! அண்ணா சட்டசபையிலேஒருமுறை இதனைத் தெளிவாகச் சொன்னார் "மந்திரிகளுக்கு லாலி பாட வரவில்லை. திறமையைப் பாராட்டுவோம். செயல்களை - குறைகளைக் கண்டு கண்டிப்போம்" என்று! பாராட்டுவது வேறு-ஆதரிப்பது வேறு! கம்யூனிஸ்டகள் புரிந்துகொள்ளாதது அவர்கள் தவறு, தவறு! சர்க்காரின் கொள்கைகளைச் சட்டமன்றத்தில் மதிப்பிடுவதைப்போலத்தான் வெளியிலும் கண்டித்துப் பேசுகிறார்! ஆனல் கம்யூனிஸ்ட்கள் தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் வந்தபோது காங்கிரஸ்காரர்களைப் பாராட்டித் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் ஊட்டிப் புறப்படுவதற்குக் கம்யூனிஸ்ட்களும் கண்ணசைத்தனர். "கொங்கு நாட்டுக் கோமளங்கள்" துணிந்துவிட்டன! சென்னையில் மட்டுமல்ல, டில்லியிலும் கம்யூனிஸ்ட்கள் நேரு பதவியை விட்டு விலகப் போகிறேன் என்றவுடன் கவலையால் நொந்து கண்ணீர் வடித்தார்கள்; நிதி மந்திரிப் பதவிக்குக்கூட நேருதான் லாயக்குள்ளவர் என்று சொன்னார்கள், டி. டி. கே. விலகிய போது! குல்சாரிலால் நந்தாவின் கையாளென்று டாங்கே பட்டம் பெறவில்லையா. இப்படிப் பல நேரங்களில் காங்கிரஸ் மந்திரிகளுக்குக் கருவியாகிவிடுகிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் மறைக்க அண்ணாவைத் தூற்றுகிறார்கள்.

★

எஸ் எஸ் சங்கர்,
திருப்பத்தூர்.

திருவரங்கம் கோவில் தீவிபத்தைப்பற்றித் தீவிரக் கம்யூனிஸ்ட்கள் என்ன சொல்கிறார்கள்?

கம்யூனிசத்தில் கடவுளிசம் காணும் இவர்கள் கோவில் விழாக்கள் நடைபெறும் இடமெல்லாம் கொடி தூக்கி உண்டி குலுக்குவார்கள். தமிழகத்துக் கப்பதாச வம்பானந்தர்கள் வரவேற்றுப் பாராட்டுவார்கள். காவிரிக்கரையில் கருகிப்போன சீரங்கநாதனின் சாம்பலைத் தண்ணீரில் கரைக்க 'புதிய பாகவதர்' தலைமையில் ஒரு படஜனக் கோஷ்டி சிவப்புக் கொடியுடன் புறப்படலாம்! நிதி கிடைக்காதே என்ற சந்தேகமும் இருக்கலாம். தீவிரக் கம்யூனிஸ்ட்கள் தீவிபத்து ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சியென்று இதுவரையிலும் சொல்லாமல் இருக்கிறார்கள். இதுவே வியப்பாக உள்ளது!

மு. நவாப்ஜான்,
கண்டரமாணிக்கம்.

பார்லிமெண்டில் சர்வகட்சியினரும் திபேத் பிரச்னையைக் கண்டித்தபோது கம்யூனிஸ்ட்கள் மட்டும் மௌனம் சாதித்தது ஏன்?

இந்தியக் கம்யூனிஸ்ட்களின் சீன பக்தியும் அடிமைப்புத்தியும்தான் முக்கியமான காரணம். திபேத் மக்களை மிருகங்களைப்போல் சுட்டு வீழ்த்திய சீன சர்க்காரை இங்கேயுள்ள கம்யூனிஸ்ட்கள் பாராட்டி ஆதரிக்கிறார்கள். தலாய்லாமாவை இந்திய சர்க்கார் தூண்டிவிடுவதாகவும், அவர் பெயரால் அறிக்கை தயாரித்து வெளியிட்டதாகவும் பழிதூற்றுவது செஞ்சீனாவின் நடவடிக்கை! இதனை எல்லோரும் கண்டிக்கும்போது இண்டெஸ்கித் தோழர்கள் மட்டும்தான் எதிர்க்கிறார்கள்! இந்தியாவிலே உள்ள ஆதிக்க வெறியர்கள்தான் திபேத் கலவரத்தை உருவாக்குகிறார்கள் என்று பஞ்சன்லாமா பேசுகிறார். அதனை மாசேதுங்கும், சௌஎன்லாயும் கைதட்டி வரவேற்கிறார்கள்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியானது ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் ஐந்தாம் படையாக இருந்துகொண்டு, இந்திய சர்க்காரை காட்டிக்கொடுக்கும் இழிசெயலைத்தான் இப்போது செய்துவருகிறது!

★

சா. மு கோ. இலசுமியில்,
தென்காசி.

கம்யூனிஸ்ட் நாடுகளின் சாதனைகள் கூறும் 'சோவியத் நாடு' இதழ்பற்றித் தங்கள் கருத்தென்ன?

இந்தியாவிலே உள்ள ரஷ்ய நாட்டுத் தூதுவரின் பத்திரிகையான 'சோவியத் நாடு' மாஸ்கோ மகிமையை இந்தியர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே துவக்கப்பட்டது! இதனைக் கம்யூனிஸ்ட்களின் "அமெரிக்கன் ரிப்போர்ட்டர்" என்றுகூடச் சொல்லலாம்! அழகான படங்கள் வெளியிடப்படுவதால் பலர் வாங்குகிறார்கள். அந்தப் பத்திரிகையின் தமிழ் நடையைப் புரிந்துகொள்ளத் தனிப் பயிற்சி வேண்டும்! சில சமயங்களில் தமிழைக் கொல்கிறார்கள்; துன்புறுத்திப் பிரசுரிக்கிறார்கள்!

★

கணேசன், நாகரத்தினம்,
விருதுநகர்.

எங்களூர்க்கு வந்த கே. டி கே. தங்கமணியிடம், டாங்கே ரூ. 5000 மாதச்சம்பளமாக அலவன்ஸ் பெறுவது உண்மையா என்று கேட்டோம். பதில் சொல்ல மறுத்துவிட்டார். காரணம் என்ன?

வடநாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் சூழ்ச்சித் திருவிளையாடல்களைப் பற்றித் தங்கமணி போன்றவர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. என்னதான் பார்-அட்லா பட்டதாரியாக இருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியிலே ஒரு பூபேஷ் குப்தா செய்யும் அட்டகாசங்களைத் தங்கமணி செய்யமுடிகிறதா? ரூ. 5000 அலவன்ஸ் பெறும் டாங்கேயைப்பற்றிய உண்மையைச் சொல்ல தங்கமணிகள் துணிவு பெறும் காலம் என்றும் வரப் போவதில்லை! தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு அகில உலகத் தொழிற் சங்கத்தின் உதவிகளைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை. எனவே கேள்வி கேட்டால் விழிக்கிறார்கள். இனியும் இந்த அப்பாவித்தலைவர்களிடம் இந்தக் கேள்வியை நம் தோழர்கள் கேட்டுக் கேட்டு அவர்களின் மானத்தைப் பறிக்காமல் ஒதுக்கிவிடுவது நல்லதென எண்ணுகிறேன். சரியான ஆதாரங்களும் மறுப்புரைகளையும் தரமுடியாமல் குப்புற வீழ்ந்துவிட்ட தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டகளை நாம் முதுகிலே தட்டியெழுப்பித் திரும்பத் திரும்பக் கேட்பதில் பலனில்லை! வெளிநாட்டு உதவிகளைப் பெறுவது அவர்களின் சொந்த விவகாரம்; அன்புகூர்ந்து நீங்கள் இனிமேல் கேட்காதீர்கள்!

★

ஆத்தூர் அன்பு, திருச்சி.

புதிய அங்கேரியைத் திபேத்திலே உருவாக்கிய சீனப் பொதுவுடமைவாதிகளின் வருங்காலம் எப்படி இருக்கும்?

இத்தனை நாட்கள் மக்களாட்சிப் பண்புக்கு எடுத்துக் காட்டு என்பதாக உலகத்தவரால் நம்பப்பட்ட சீன நாட்டுத் திருவிளையாடல், எதிர்காலத்தில் ஏனைய அண்டை நாடுகளும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராக வேண்டும் என்ற உண்மையை உருவாக்கியுள்ளது. இந்திய சர்க்காரை ஏகாதிபத்திய மண்ணாசை பிடித்தவர்கள் என்று பேசுகிற சீனக் கம்யூனிஸ்ட்கள் ரஷ்யாவின் உதவியையும் பெற்று திபேத் மீது ராணுவத்தை ஏவியதுபோல் இந்தியாவின் மீதும் படையெடுக்கத் துணியமாட்டார்கள் என்பதை நாம் நம்புவதற்கில்லை! புதிய அங்கேரியைத் தந்துள்ளவர்களின் எதிர்காலம் பஞ்சசீலப் பண்டிதர்களுக்குப் பழைய பாடங்களை நினைவூட்டக் கூடியனவாகும்!

★ ★ ★

"தென்னகம்"

புதிய முகவரி

மே முதல் தேதி முதல் "தென்னகம்" அலுவலகம் புதிய இடத்திற்குமாற்றப்பட்டிருக்கிறது. மே 1-ந்தேதி முதல் "தென்னகம்" சம்பந்தப்பட்ட போக்குவரத்துக்கள், மணியார்டர்கள் முதலியவைகளையும் ஆசிரியர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கான கழக சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்புகளையும் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்ப வேண்டுகிறோம்.

தென்னகம்,
126, பவுண்ட்ரோடு,
சென்னை-6.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

என்ற பெருமையோடு. வரலாற்றுச் சுவடியாகவும் உள்ளது.

சமுதாயம் ஒருநாள் விழித்துக் கொண்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மும்மொழிகளை உலகிற்களித்த பிரெஞ்சு, ஆணவக்கூத்தாடிய லூயியை வீழ்த்தி அடிமைத்தனத்தை நொறுக்கிய பிரெஞ்சு, தங்கள்மேல் மட்டும் எப்படி அடிமைத்தனத்தைப் பூட்டலாம் எனக் கொதித்தெழுந்தனர் பிரெஞ்சு ஆட்சியில் விழுந்துகிடந்த மக்கள். "புதுமைச் சங்கநாதம் திசையெங்கும் ஒலிக்கும் வேளையில் எம்மை மட்டும் நீர் அடிமைகொள்ள நினைப்பதோ?" என்று ஆர்த்தெழுந்த மக்கள் விடுதலை ஒளியைக் கண்டனர் ஓரளவு 1954-ல். '54 தொட்டு பிரெஞ்சு, இந்தியத் துணைக்கண்ட அமைப்பிடம் ஓரளவு பொறுப்பைத் தந்தது. இந்திய ஸ்தானிகர் ஒருவர் பாண்டிச்சேரியிலிருந்து அம்மக்களை ஆள்கிறார்.

'54-க்குபின் அங்கே புதுமை ஒன்றும் பூத்துவிடவில்லை.

சுயநல வேட்டையையும் சந்தர்ப்பவாதத்தையும், சதி-சாகசத்தையுமே வழியாகக் கொண்ட குபேர், சுப்பையா முதலிய பலர் அங்கு உலவினர். அங்கு அமைதியான ஆட்சி இல்லாததால். தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அசெம்பிளி கலைக்கப்பட்டது. வெகுநாட்களுக்குப்பின் வருகிற ஜூலையில் தேர்தல் நடக்கவிருக்கின்றன. பதவி ஒன்றே குறியாய், பாகுமொழிகளைச் சிந்துவோர் மக்களைச் சூழ்கின்றனர். இப்போது நம் நிலை என்ன?

பிரெஞ்சுக்காரரும் நமக்குப் பிறநாட்டாரே! அதேபோல் வடநாட்டாரும் நமக்குப் பிறநாட்டரரே! இரண்டு தளைகளில் இருந்தும் நாம் நம்மை விடுவித்துக்கொள்ள வேண்டியதுதான் கடன். இதனை ஆராய்ந்து முடிவு காண்பதற்குக் கடந்த திங்களில் காரைக்காலில் கூடினோம். இப்போது பாண்டிச்சேரியில்கூடுகிறோம்! கழகத்திற்குஅயராதுழைக்கும் கவிஞர் ச.சிவப்பிரகாசம், வழக்கறிஞர் பெருமாள் ஆகியோர் செயலாளராய் உழைக்கின்றனர் தெளிந்த சொல்லும் தோய்ந்த திறனும் படைத்த கழக எம். எல். ஏ. திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வரவேற்புக் குழுத்தலைவராகப் பணியாற்றுகிறார். ஆர்வம் கொழிக்கும் இன்னும் பன்னூறு தோழர்கள் கைநீட்டி வரவேற்கின்றனர். தி. மு. க. உங்களை அழைக்கிறது! புரட்சிப் பாடல்கள் எழுந்த இடங்களிலே நமது புதுமைத் திட்டங்கள் எழ வேண்டியிருக்கின்றன! அதில் உங்கள் பொறுப்பை - பங்கைச் செலுத்திட வாரீர்! வாரீர்!

— பா. பாண்டியன்

புதிய வரலாறு !



சென்னை 29-4-59 அன்று, புதிய வரலாற்றைப் படைத்தது. தோழர்கள் பலர் ஆர்வத்துடன் ரிப்பன் மாளிகைமுன் கூடினர். தி. மு. கழகம் முதன் முறையாக நகராட்சிப் பொறுப்பை ஏற்கும் காட்சி அன்று பகல் $2\frac{1}{2}$ மணி அளவில் நிகழ்ந்தது. உறுப்பினர்கள் நகராட்சிக்குள் நுழையும்முன் திராவிடர் தலைவர் தியாகராயர்க்கு மலர் மாலைகள் சூட்டினர் நம் பொதுச்செயலாளர். சிலையின்பின் அவரும் கலைஞர் மு. கருணாநிதியும் உறுப்பினர் வி. முனுசாமியும் நிற்கின்றனர்.

கீழே இடது—மேயர் அரசுவும் துணைமேயர் சிவசங்கரனும்

,, வலது—பதவி ஏற்றபின் நன்றியுரைக்கும் திரு. அ. பொ அரசுவும் கூர்ந்து கவனிக்கும் ஆணையாளர் திரு. பாலசுந்தரமும்



ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.